1187

# மார்க்க பக்தாமிருதம்.

என்னும்

## மார்க்கக் கல்வியின் நிர்ணயப் பிரமாணம்.

இஃது

கீரனூர். மௌலவி,
முஹம்மது சகீது ஸாஹிபு (பாக்வி)
அவர்களாலியற்றப்பெற்று

ஷையூர்
கனம். கா. ஹாஜி. காதர் கனி ராவுத்தர் அவர்களின்
பொருளுதவியைக்கொண்டு

திருச்சி, பாலக்கரை,
இஸ்லாமிய பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.

1930

…ப் பதிப்பு காப்பி 1000.

[விலை அணா 5.

Q7:414
N30
170334.

# மார்க்க பக்தாமிருதம்.

என்னும்

## மார்க்கக் கல்வியின் நிர்ணயப் பிரமாணம்.

இஃது

கீரனூர். மௌலவி,
முஹம்மது சகீது ஸாஹிபு (பாகவி)
அவர்களாலியற்றப்பெற்று

ஷெயூர்
கனம் கா. ஹாஜி காதர் கனி ராவுத்தர் அவர்களின்
பொருளுதவியைக்கொண்டு

திருச்சி, பாலக்கரை,
இஸ்லாமிய பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.

1930

முதல் பதிப்பு காப்பி 1000.

Registered.] [விலை அணா 5.

# வேண்டுகோள்.

தற்காலத்தில் அஞ்சுமன்களெனவும், சீர்திருத்தங்களெனவும், ஒத்துமைகளெனவும் அன்னிய சமூகத்தினரின் சட்டதிட்டங்களை அதனுள்புகுத்தி, நமது இஸ்லாமிய வரம்பின்படி காரியாதிகள் நடைபெருமல், விழலுக்கிறைத்த நீர்போல் எத்துணையோ அஞ்சுமன், மார்க்கசீர்திருத்தம், ஒத்துமை, தேசீயம், ராஜீகம் இருந்தவிடம் தெரியாமல் மறைந்து கிடக்கின்றன.

நமது இஸ்லாமிய வரம்பின்படி இக்குறைவுகளை நிவர்த்திக்க, ஹகீமுல் உம்மத் ஷெய்கு, அஷ்ரப் அலி மௌலானா அவர்களால், தயாரித்த அநேக கிரந்தங்களில் சிலதை இம்மிஸ்கீன்—தாய்ப்பாஷையாகிய நந்தமிழில் முஸ்லிம் சகோதரர்களுக்கு மொழிபெயர்த்து வெளியிடலாமென ஆதரவு வைக்கிறேன்.

மார்க்காபிமானிகள் எவரேனும் ஒருவர் அச்சியற்றும் செலவிற்கு திரவியசகாயம் செய்வார்களேல், இப்புண்ணியமானது ஒருவர் சீர்திருத்தமடைந்தால், அதுவே மிஸ்கீனுக்கும் திரவியசகாயம் புரிந்தோருக்கும் இரண்டு உலகத்திற்கும் என்றும் அழியாத பாக்கியமாகுமென நேயர்களிடம் பணிவாகக்கேட்டுக் கொள்ளுகிறேன். இப்படிக்கு,

**முஹம்மது சகீது,**

கீரனூர், பழனி தாலூகா.

بسم الله الرحمن الرحيم

# முகவுரை.

அக்கீமுல், உம்மத், மௌலானா, ஷாஹ், முகம்மது அஷ்ரபலி தாமத், பரக்காத்தஹு அவர்கள் தற்காலத்தில் தீனியத்தான இல்முகளைப்பற்றி சகல முஸ்லிம்களும் ஆசையில்லாதிருப்பதின் நோக்கத்தை கவனித்து இவர்களுக்கு தீனுக்குச் சம்பந்தமான கல்விகளின் விஷயம் இன்னதென அறிந்துகொள்ளாத காரணமேயாகுமென்றும், (அதாவது) இவர்கள் தீனுக்குரிய இல்முகளின் கருத்துகளிலும் மாணவர்கள், உலமாக்கள்பேரிலும் புதிய சீர்திருத்தங்களினால் தங்கள் மனதின் இஷ்டப்படி தப்பிதமான அபிப்பிராயபேதங்களை நாவினாலும், பேனாவினாலும் வெளியாக்கிவருகின்றனர்.

மேலும், மார்க்க கல்வியின் சொற்ப பயிற்சியின் ஒருசிலர் தங்களுக்குரிய மார்க்க கல்வியின் குறைவினால் மார்க்கத்தின் கிரியாம்சங்களை அநுஷ்டானத்தில் கொண்டுவராமல் ஒழுங்கீனமான துர்ச்செயலிலீடுபட்டுத் திரிவதை கண்ணுற்ற பாமர முஸ்லீம்கள் விஷயங்களின் உண்மையை உணர்ந்துகொள்ளாது எல்லா உலமாக்களின்பேரிலும் கெட்ட எண்ணங்கொண்டு தீனியத்தான கல்வியளவில் பிரியமற்றவர்களாகவும் காணப்படுகிறார்கள்.

இதனால் (அகீதா) எண்ணம் (அமல்) கிரியைகள் கெட்டு தீன்துன்யாவின் நஷ்டகஷ்டங்களில் ஈடுபட்டிருப்

பதை இவர்களின் புத்தியின் திறமைக்குறைவினால், தங்களின் ஐயறிவைக்கொண்டு விளக்கிக்கொள்ளாவிடினும், புத்தியின் திறமையை அநுஷ்டானத்தில் கொண்டுவருவதால் உடனே பிரத்தியட்சமாய் விளக்கிக்கொள்ளலாம்.

அல்லாஹுத்தஆலா குர்ஆன் ஷரீபில் 11 ஜுசுவு தௌபா சூரத்து 6 ருக்கூஹுவில் அந்தப் பாவிகள் காணவில்லையா? அவர்களை வருடந்தோறும் 1 தரம் 2 தரம் பஞ்சங்களினாலும் நஷ்டங்களினாலும் சோதிக்கப்படுவதை அவர்கள் காணவில்லையா? பின்பு அவர்கள் பாவங்களை விட்டு மீளாமலும் அவர்களைச் சோதிப்பதைக்கொண்டு உறுதிபெறாமலும் இருக்கவில்லையா? என்ற ஆயத்துகளும் அதீதுகளும் மிக மலிந்து காணக்கிடக்கின்றன என்னும் அநேக ஆதாரங்களுடன் நமது இஸ்லாமிய வர்க்கத்தினர் மார்க்க சீர்திருத்தம் பெருகுவதற்கு அநேக நூல்கள் அரபியிலும் உருதிலும் மேற்கூறிய இப்பெரியாரவர்கள் வெளியாக்கியிருக்கிறார்கள்.

## யான் இதை எழுதியதின் முக்கிய நோக்கம்.

முஸ்லிம் சகோதர சகோதரிகளே!

பழனி தாலூக்கா, கீரனூர் வாசியாகிய (பகீர்) முகம்மது சஹீது என்பவனாகிய யான் எனது இளம்பருவத்திலிருந்து (தீன்) பாரமார்த்தீகத்தின்பேரில் பற்றுண்டாகிப் பெரியார்களான செய்குமார்களைக்கண்டு (தீன்) பாரமார்த்திகத்தின் சிகிச்சை பெறவேண்டுமென நெடுநாளாய் அப்பேராவல்கொண்டு தேடிப்பார்க்கையில், மௌலானா, முர்ஷிதுனா, அக்கிமுல், உம்மத், அல்ஹாஜ், அல்ஆபிஸ், ஷாஹ முகம்மது அஷ்ரபலி, மத்தஜில்லுஹுல் ஆலி (தானலி)

ஜிஸ்திதரீக், அனபிமதஹபின் இப்பெரியாரைச் சந்தித்து சில நாள் இன்னோருக்குப் பணிவிடைகள் புரிந்து தீனின் சிகிச்சைபெற்று தீன் துன்யாவின் ஆபத்தில் நின்றும் மீட்சிபெற்று அல்லாவின்மீதுள்ள ஆசையினால் சுலூக்கில் நடந்து வருகிறேன்.

ஆகையால் இப்பெரியாரவர்களால் வெளியான சில கிதாபுகளைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டு முஸ்லிம் சகோதர சகோதரிகளுக்கு இப்பேரின்ப ஆசையை எடுத்தோதுவதற்குரிய லாயக்கு எனக்கில்லாவிடினும், மற்றும் ஏனைய உலமாக்களின் உதவியினாலும் அதில் சொந்தமாக மௌலவி, ஆ கா. அப்துல் ஹமீது சாஹிபு அவர்கள் உதவியாலும் மேற்கூறிய பெரியார் அவர்கள் சேகரித்த சில கிதாபுகளின் சாரங்களை தமிழில் மொழி பெயர்த்து பழனி தாலூக்கா, கீரனூர் வாசியாகிய ஜனப், கா. ஹாஜி. காதர் கனி ராவுத்தர் அவர்களின் மனமார்ந்த திரவிய சகாயத்தால் அச்சிட்டு வெளிப்படுத்தியிருக்கிறேன்.

இந்நூலை பார்வை செய்யும் இஸ்லாமிய நேயர்கள் குற்றமிருந்தால் மன்னித்து குணத்தை கைபாண்டு வரும்படி பணிவாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஒ! எங்கள் நாயனே! இந்நூலை இயற்றியவருக்கும், பார்க்கும் முஸ்லிம் நேயர்களுக்கும், இதற்குப் பொருளுபகாரம் செய்தவருக்கும் ஈமானின் பூர்த்தியையும், இஸ்லாத்தின் கீர்த்தியையும் உன் கிருபையைக்கொண்டு இரண்டு உலகிலும் நல்லருள் புரிவாயாக. ஆமீன்!

இங்ஙனம்,

முஹம்மது சகீது,

கீரனூர், பழனி தாலூக்கா

# முக்கிய கவனிப்பு.

4-ம் பக்கம் 22-ம் வரியில் எவ்வாறு கூறப்பட்டிருக்கிறது என்பதை பின்வருமாறு திருத்தி வாசிக்கவும். (எவ்வாறு கூறப்பட்டிருக்கிறதென்பதின் நுட்பங்களையுணர்ந்து இதன்படி நடக்கமுடியாதிருப்பினும் இவைகளை நன்ருய் விளங்கி அறிகிறது வாஜிபென்ற கருத்தானது அன்னியர்களின் பைசல்களை நியாயமென்று (இக்திகாது) உறுதிகொள்ளாமலிருக்கும்பொருட்டே.)

14-ம் பக்கம் 11-ம் வரியில் புகஹாக் என்பதை பின்வருமாறு திருத்தி வாசிக்கவும். (புகஹாக்கள் பலவிதமான மசலாக்களைப் பிரித்து பாகுபாடு செய்திருக்கின்றனர். ஒருவன் மற்ருருவனுடைய பிரயோஜனத்திற்குக் கட்டுப்பட்டிருக்கிருனே அவனுடைய அன்னவஸ்திரம் கட்டுப்படுத்தினவன்பேரில் வாஜிபாகிறது. பெண்ஜாதியின் அன்னவஸ்திரம் புருஷன்பேரில் வாஜிபாகிறதுபோல்.)

15-ம் பக்கம் 2-ம் வரியில் பின்வருமாறு சேர்த்துக் கொள்ளவும். (ஏனெனில் ஒவ்வொரு வேளையிலும் நாவு, கை, கல்பு முதல்போன்றவைகளைக்கொண்டு தீனுக்குரிய பணிவிடைகள் செய்வதின் கருத்து முக்கியமானதால் காலக்ஷேபத்தின் கவலையற்றவர்களாயிருத்தல்வேண்டும்.)

18-ம் பக்கம் 10-ம் வரியில் பின்வருமாறு சேர்த்துக் கொள்ளவும். (தற்காலத்தின் முற்றும் அடையவணழந்த பழக்கவழக்கமானது அசல் உண்மையின் சாராம்சத்தை ஊன்றிக் கவனிக்காமல் அன்னியரின் பழக்கவழக்கங்களை நலமோ கெடுதலோ யாதொன்றையும் சீர்தூக்கிப்பாராமல் வழிகாட்டிகளாய் ஏற்பட்டுக்கொள்கின்றனர். எனவே, உலமாக்கள்மீது குற்றம் சுமத்துமுன் துன்யாதாரர்கள் அந்த துன்யாதாரர்களுக்குச்சமமாகவேனும் முயற்சிக்கின்றனரா? இல்லையாவென்று கவனிக்கவேண்டியது.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 3 | 16 | எண்ணங்கள் | எண்ணங்களில் |
| 4 | 5 | சம்ரட்ஷணை | சம்ரட்சணை |
| 4 | 13 | சத்துருக்கள் | சர்த்துகள் |
| 8 | 15 | படிக்கத்தெரிந்த | படிக்கத்தெரிந்தவர்கள் |
| 10 | 5 | கருத்து | வர்த்து |
| 10 | 26 | மற்கூறிய | மேற்கூறிய |
| 11 | 1 | வைப்பதுதவிர | வைப்பதுவைத்தவிர |
| 11 | 2 | காரியமும் வஜிபாகுமோ | காரியம் வாஜிபாகு? |
| 11 | 6 | அதிகமாகாதென்பதில் | அதிகமாகுமென்பதில் |
| 12 | 8 | இஸ்லாம் வர்க்கத்தினராக | இஸ்லாம் வர்க்கத்தினர்களுக்காக |
| 14 | 6 | விட்ட | விட்டு |
| 19 | 1 | ஜூத்தா | ஜூுத்தா |
| 19 | 7 | புத்தி | புத்தி அதனால் |
| 19 | 12 | கற்றுக்கொள்ளாமல் | கற்றுக்கொள்ளாமல் அவ்வேலைகளைச் செய்யமுடியவில்லை. தீனின் படிப்பும் |
| 19 | 26 | பொருந்தியிருப்பதாய் | பொருந்தியிருப்பதால் |
| 20 | 16 | பேராவால் | பேராவலால் |
| 21 | 16 | சொல்லி | சொல்வதைவிட்டும் |
| 25 | 6 | கெண்டிருக்கும் | கொண்டிருக்கும் |
| 28 | 22 | இட்டுக்கட்டிப் | இட்டுக்கட்டிய |
| 29 | 13 | பிரஒளளியத்து | பிர்ஒளணியத்து |
| 30 | 11 | அணுகாதிருப்பானுகை | அணுகாதிருககவைப்பானுகை |
| 32 | 5 | மேல்சில வம்சத்தினர் | மேல்குல வங்ஷத்தினர் |
| 32 | 18 | தன்னுடை | தீனுடைய |
| 34 | 13 | வடுக்கலான | வடுக்களான |
| 38 | 12 | சுபூர் | ஸபர் |

| பக்கம். | வரி | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 39 | 16 | பாலாவது | பாலாவதுபோல் |
| 42 | 5 | விளக்கும் | விளங்கும் |
| 43 | 18 | கேட்போர் | கெட்டபேர் |
| 43 | 25 | செய்வதால் | செய்வதில்லை. |
| 47 | 25 | பணுதாக்கி | பளுதாக்கி |
| 48 | 23 | மனிதன் | மனிதனில் |
| 49 | 2 | குணவான்களாயிருக்கு | குணங்களாயிருக்கும் |
| 49 | 9 | பகுந்து | புகுந்து |
| 49 | 12 | சந்தர்ப்பங்களை | சந்தாபங்களை |
| 49 | 21 | மதனவியால் | மதனவியில் |
| 50 | 10 | உண்டாகுமென | உண்டாகும். என் |
| 52 | 20 | இடத்திலும் | இடத்தில் |
| 54 | 26 | ஆலிம்கள் | ஆலிம்களால் |
| 57 | 20 | இன்னதென்று | குறிப்பிட்டு சுட்டிக்காட்டாததால் அப்படிப்பு கூடாதென்றசட்டத்திற்கு சந்தேகத்தை யுண்டுபண்ணுது என ஒருவன் பல முகாந்திரத்தைக்கொண்டு மேற்கண்ட காரணங்களால் குணத்தின் பாகுபாடு ஏற்படாதென்று வாதிப்பினும் |
| 58 | 20 | கூடியதல்ல | கூடியவைகளிலல்ல |
| 70 | 11 | கெடுதிக | கெடுதியாக |
| 73 | 9 | வாலு | வகலு |

# அட்டவணை.


| விபரம். | பக்கம். |
|---|---|
| தீனுடைய இல்மில் தற்கால குறைவின் காரணம் | 1 |
| ஷை விஷயத்தில் சந்தாபத்தை நிவர்த்தித்தல். | 3 |
| துன்யாதாரர்களின் இரண்டு கேள்விகள். | 9 |
| முதலாவது கேள்வியும் விடையும் | 9 |
| இரண்டாவது கேள்வியும் விடையும் | 12 |
| ஷை சந்தாபங்களுக்கு ஆயத்தின் விரித்துரை | 14 |
| உலமாக்கள்மீது துன்யாதாரர்களின் கேள்வி. | 16 |
| ஷை கேள்விக்கு மூன்றுவிதமான ஜவாபு | 17 |
| துன்யாதாரர் மாணவர்மீது குறைகூறலுக்கு பதில். | 18 |
| உலமாக்களுக்கு ஓர் எச்சரிக்கை. | 20 |
| ஷை விஷயத்தில் முக்கிய கவனிப்பு. | 23 |
| துன்யாதாரர் ஆலிம்கள்மீது கொண்டிருக்கும் தப்பபிப்பிராயம் | 25 |
| பெண்களுக்குப் படித்துக்கொடுக்கும் சீர்திருத்தம். | 35 |
| ஷையாருக்குப் படித்துக்கொடுப்பதில் அபிப்பிராயப்பேதத்தில் முந்தின வகையார். | 35 |
| ஷை 2 வது வகையாரின் சந்தாபத்தின் நிவர்த்தி. | 40 |
| ஷை 2 வது வகையாருக்கு ஓர் முக்கிய கவனிப்பு. | 44 |
| ஷை 3 வது வகையாரின் சீர்திருத்தம் | 45 |
| ஷை 3 வது வகையாருக்கு ஓர் கவனிப்பு. | 47 |
| பெண்களுக்கு மார்க்க ஒழுங்கின்படி கற்றுக் கொடுக்கும் வழி. | 52 |
| இங்கிலீஷ் படிப்பதின் பத்வா. | 54 |
| புதிய முன்னேற்றக்காரர்களுடைய கேள்வி. | 59 |
| ஷை கேள்விக்குப் பதில். | 63 |
| உலமாக்கள் காலத்தின் நிலைமை அறியாததின் பேரில் குறைகூறல். | 70 |
| பேப்பர் பார்ப்பதின் ஷர்த்துகள். | 73 |

بسم الله الرحمن الرحيم

# மார்க்க பக்தாமிருதம்.

சில மனிதர்கள் தீனுக்குச் சம்மந்தப்பட்ட இல்மு, தொழுகை நோன்பு சம்பந்தப்பட்டவைகள் மாத்திரந்தான் என்று கருதி அதற்காக தமிழ், அரபுத்தமிழில் சிறிய கித்தாபுகளிருக்கின்றன. அவைகளிலும் இல்லாதவைகள் ஆலிம்களிடம் தெரிந்துகொள்ளலாம். இதற்காக நாம் யாதொரு தனிப்பட்ட முயற்சி செய்வது அவசியமில்லையெனக் கருதுகின்றனர்.

இவ்வாறெண்ணுவதின் காரணம் தீனில் என்ன என்னவகையான அம்சங்கள் இருக்கின்றனவென்பதை அவர்கள் விளங்கிக்கொள்ளாததே. அதனால்தான் தொழுகை நோன்பில் மாத்திரம் நம்முடைய தீன் சுருக்கப்பட்டுவிட்டதெனத் தப்பபிப்பிராயம் கொள்கின்றனர். இதுவே முந்தினதப்பிதம். எனவே, இவைகளை நன்றாய் விளங்கி அறிய வேண்டியது முக்கியமாகையால்

1. அக்கீதா = கொள்கை நிர்ணயப்பிரமாணம்.
2. இபாதத் = வணக்கம்.

3. முஆமலாத்=லேவாதேவி.

4. முஆஷராத்=குடும்ப வாழ்க்கை.

5. தக்தீபே அஹ்லாக்=குணங்களை அல்லது நபுவை மார்க்க ஒழுக்கத்தின்படி சீர்திருத்தம் செய்வது இவை களைப்பற்றி கிமியாயே சஆதத்து போன்ற கிரந்தங்களில் குர்ஆன் ஷரீபு ஹதீது சரீபுகளில் (தலீல்) ஆதாரங்களைக் கொண்டு விரிவாகவும் தெளிவாகவும் விபரிக்கப்பட்டிருக் கிறது.

எந்த மனிதன் தனது ஒவ்வொரு வேலையிலும் தனது சொல் செயல் முதலியவைகளை மார்க்க ஒழுங்கின்படி சரி வர முற்றிலும் சீர்தூக்கிப் பார்க்க விரும்புகின்றானோ அது சமயம் ஒவ்வொரு விஷயத்திற்கும் மார்க்கச் சம்பந்தப்பட்ட சட்ட திட்டங்களை அறியவிரும்புகிறான். அச் சமயத்து சிறிய கிரந்தங்களும் சாதாரண மௌலவிகளும் இதற்குப் பொருந்தாதெென நன்றாய் விளங்கிக்கொள்ளுவான்.

எனவே, தீனுல் இஸ்லாத்தின் இல்முகள் எந்தமட்டி லும் விரிந்திருக்கின்றது. அதில் தேற்சிபெற்ற மேதாவிகள் எம்மட்டிலும் குறைவுப்பட்டிருக்கின்றனர். மேலும், இஸ்லாமியா வர்க்கத்தினர் இக்கல்வியின் முக்கியமான வைகளையுணர்ந்து நடப்பது எந்தமட்டிலுமிருக்கின்றது. மேலும், இக்கல்வியில் தேற்சிபெற ஒரு கூட்டத்தினரை சேகரிப்பதென்றால் எத்துணை சாமான்களும் பெருமிதமான அபார முயற்சியும் அத்யாவசியமாயிருக்கின்றது. தற்காலம் இக்கல்விகளுக்குரிய சாமான்கள் எந்தமட்டிலுங்குறைவுபட் டிருக்கிறது என்பதை சற்று சீர்தூக்கிப் பார்க்கவேண்டும்.

(கேள்வி.)

மார்க்கத்தின் கல்விகளைப்பயின்று மௌலவிகளாக முயலுவதில் நீண்டகாலம் அதில் கழிந்துபோய்விடுகிறது. காலக்ஷேமத்திற்குரிய இலௌகிக கல்வி கற்பதற்கு அதில் ஒரு சிறிதும் அவகாசம் கிடைப்பதில்லை. இவ்வாறு லௌகிக கல்வி கற்கவிடாது மாணவர்களை மௌலவிகளாகச் செய்வதனால் அவர்களுக்கு சாப்பாடு உடை முதலிய வஸ்துக்கள் எப்படிக் கிடைக்கக்கூடும். முடிவில் வறுமை மேலிட்டுப் பரதேசிக்கோலம்பூண்டு யாஜகம் புரிவதைவிட வேறு வகை ஒன்றுமே காணப்படவில்லை. இப்படிப்பட்ட விஷயங்களால் எங்கள் குலத்தின் அந்தஸ்திற்கும் குடும்ப முன்னேற்றத்திற்கும் பெருத்த கேட்டை விளைவிப்பதற்கு இது ஒரு முக்கிய காரணமாகத் தோன்றுகிறதென சில மனிதர்கள் எண்ணுகின்றனர்.

(ஜவாபு)

இன்னோரின் எண்ணங்கள் பல தவறுதல்கள் மலிந்து கிடக்கின்றன. தீனுக்குரிய கல்வி அவசியம்வேண்டுமென்று உலமாக்கள் சொல்வதின் கருத்தை ஊன்றி கவனியாது ஒவ்வொருவரும் பூர்த்தியானமௌலவிகளாகவேண்டியது வாஜிபென விளங்கித் தப்பபிப்பிராயங் கொண்டனர்போலும். எனவே, ஊன்றிக் கவனித்துணரவேண்டியது என்னவென்றால் உலமாக்களுக்கு ஒருபோதும் அவ்விதக் கருத்து ஒரு சிறிதும் கிடையாது. ஏனெனில், தீனுக்குரிய அகத்தியமான கல்விஎன ஒருவகையும், பூர்த்தியாய் மௌலவிகளாகவேண்டியதற்குரிய கல்வி மற்றொருவகையுமாக கல்வி இரண்டு வகைகளாகப் பாகுபாடு செய்யப்பட்டிருக்கிறது. இதில் அகத்தியமான கல்வியாவது.

(அக்கீதா) இருதய விளக்கங்களில் தவறுதல்களை நீக்கி சுத்தமாக்குவதும், (பரல்) கடமையான வணக்கங்களின் வெளிப்பரல் உட்பரலின் சட்டதிட்டங்களை அறிவதும், (முஆமலாத்) லேவாதேவி, (முஆஷராத்) குடும்பத்தின் சம்ரட்ணை ஆகியவைகளில் எது மிகுந்து முன்னால் நடபடிக்கையால் அனுஷ்டானத்திற்குவருகின்றதோ அவைகளுக்குரிய சட்டதிட்டங்களை முக்கியமாய் அறியவேண்டிய கடமையாக இருக்கும்.

உதாரணமாகத் தொழுகை எந்த எந்த வகைகளினால் பழுதாகும் எந்த எந்த வகைகளினால் சஜ்ஜிதாஸஹ்வு வாஜிபாகும். இதுபோன்ற (ஜகாத்) மார்க்கவரி எந்த முதலில் வாஜிபாகிறது? அதை நிறைவேற்றுவதில் எத்தனை சத்துருக்களிருப்பது? இவைபோன்ற ஹஜ்ஜு, நோன்பு முதலிய சட்டதிட்டங்களையும் நிக்காஹுவில் எந்தப்பெண் ஹலாலாக இருக்கின்றாள்? எவ்வகையான வார்த்தைகளால் நிக்காஹு புதுப்பிக்கவேண்டும்? பால் குடியினால் எவ்வகையான பெண்கள் ஹராமாகின்றனர்? இப்படியே முதல்களை மாற்றுவதில் எப்படிப்பட்ட வஸ்துக்களை பேணவேண்டும்? ஒரு பூமியையோ ஒரு மனிதனையோ கூலிக்கு நியமிக்கும் சமயம் எந்த வகையினால் ஆகும்? எந்த வகையினாலாகாது. பைசல் பஞ்சாயத்திவைகளின் சட்டங்களை மார்க்கத்தில் எவ்வாறு கூறப்பட்டிருக்கிறது? (இத்திகாது) கொள்கை சம்பந்தப்பட்டவைகள் நிர்ணயம் எந்த எந்தப் புடவைகள் ஹலால்? அதில் எவை ஹராம்? உத்தியோகத்தில் எவ்விதமான வேலைகள் ஆகும்? அதில் எவை ஆகாது? என ஊன்றிக் கவனிக்கவும்.

இதில் அதிர்ஷ்டக்குறைவின் காரணத்தால் ஆகாதகாரியத்தில் தலையிட்ட குற்றவாளியானபோதிலும், அவைகள் முற்றும் தெரிந்த நிமித்தம் இரண்டுவிதமான குற்றத்திற்குடன் படாமல், அதாவது, கெட்ட செயல்களை கெட்டதென்றுணராதக்குற்றத்தைவிட்டும் நீங்கிக்கொள்ளுதல், சாப்பிடுவதும், குடிப்பதும், எவை ஆகும்? எவை ஆகாது? என்று அறிவதும், சந்தோஷகரமான வஸ்துக்களில் எதைப் பரிமாறுதல்கூடும்? எவை கூடாது? என்றுணர்வதும் புகழப்பட்ட இகழப்பட்ட குணங்களை பிரித்தறிவதும் இவைகளின் பரிபக்குவ சிகிச்சை செய்வதின் வழிகளை நன்றாய்த் தெரிவதும், உதாரணமாக முகத்தாட்சணை பெருமை கோபம், பேராசை, அவிழ்கை, அநீதம் இவைகளின் உண்மை தமக்குள்ளிருக்கின்றதா? இல்லையா? என விளங்கி அப்படிப்பட்டவைகளிருக்குமாகில் அவைகளை நீக்குவதற்குரிய ஆலோசனை செய்வதும் தன்னுடைய குற்றங்களைப்பற்றி இறைவனிடம் மன்னிப்பு தேடுவது போன்றவைகளாகும். இவைகள் யாவும் ஒவ்வொரு முஸ்லிம்கள் மீதும் கடமையாக அமைக்கப்பட்டிருக்கிறது. ஏனெனில், இவைகளை அறியாத குறைவினால் அநேக சமயங்களில் பாவத்திற்காளாகி, அல்லாஹுத்தஆலாவின் கோபத்திற்கு உடன்படுகின்றனர். இச்சட்டங்களை அறியாமல் உலகக் கல்விக்காகவே தேர்ச்சிபெற்ற உயரிய பதவி வகித்த மனிதர்கள் பலர் பெருத்தத் தவறுகள் செய்வதைப் பிரத்தியட்சமாய் நாம் பார்க்கிறோம். அந்தோ பரிதாபம்! இவர்களுக்கு மார்க்கக்கல்வி என்ற நறுமணம் அறவே இல்லாத நிமித்தம் சில சமயங்களில் அவர்களுக்கு எச்சரிக்கை செய்தபோதிலும் அதை அவர்கள் ஒருசிறிதும் உணர்ந்து

கொள்வதில்லை. உதாரணமாக இப்படிப்பட்ட தொழுகை யாளர் ஐந்து பத்துமைல் பிரயாணத்திலும் பிரயாணத் தொழுகை (கஸர்) செய்வதைப் பார்த்துமிருக்கிறோம். (ஜக்காத்) மார்க்க வரியை ஹிஜாஸ் ரயில்வே சந்தாக் களுக்கு உபயோகப்படுத்துகின்றனர். நோன்பு வைப்பதில் சிகரட், பீடியை அருந்துவதால் நோன்பு முறியாதென அபிப்பிராயம் கொள்கின்றனர். உடன்பிறந்தாளின் மகளை நிக்காஹ் செய்வது ஆகுமென்று கருதியவனையும் நான் பார்த்திருக்கிறேன்.

தங்கம் வெள்ளிகள் மாற்றுவதிலும், தானியங்களின் லேவாதேவியிலும், ரயில்வே சட்டப்படி அனுமதிக்கப்பட்ட அளவைவிட அதிகமான சாமானை கொண்டுபோவதும் மார்க்கத்திற்கு முற்றும் விரோதமென்று எள்ளத்தனையும் கவனிப்பதே கிடையாது. உத்யோகம், உடை முதற் போன்றவைகளில் விலக்கப்பட்டவைகள் எவ்வளவோ இருக்கின்றன. அந்த வித்தியாசம் இவர்களிடத்தில் ஒன் றுமே இல்லை. குணங்களிலோ தற்கால நவீன நாகரீக முன்னேற்றத்தின் பேராசைகொண்டு மற்றைய இஸ்லா மானவர்களைக்கேவலப்படுத்துவதைத்தவிர மற்றொன்றையும் கற்றுக்கொண்டதாக விளங்கவில்லை. ஆகவே, இவ்வாறான கெடுதல்களை அறிவிக்கக்கூடிய கல்வி கற்றுக்கொள்வது தான் ஒவ்வொரு முஸ்லிமின்மீது (பர்லுஐனு என்னும்) கடமையாகும். இதற்கதிகமாக கற்றுக்கொள்வது ஒவ் வொருவர்மீதும் கடமையல்ல. எனினும், சிலரேனும் அதற்கதிகப்பட்ட கல்வியை கற்றிருப்பது (பர்லு கிபாயா வென்னும்) கடமையாகும். ஏனென்றால், அன்னிய மதத்

தினர் இஸ்லாத்தின்மீது பல மறுப்புகளை விடுத்து சந்தேகங்களையுண்டுபண்ணிவருகின்றனர். அத்தீங்கைத்தவிர்க்கக் கருதித் தீனியாத்தின் பெருமிதக் கல்விகளையும் இதற்குரிய அத்தியாவசியமான சாமான்களைத் தயாரிப்பது (பரலுகிபாயா)வென்று சொல்லப்படும். (பர்லுஐன்)என்று சொல்லப்பட்டவைகள் ஒவ்வொரு முஸ்லிம் நபர்களும் அவசியம் அதை செய்தே முடிக்கவேண்டுமென்ற வேத விதியான முக்கிய கட்டளை. இதில் எவன் தனது திறமையைக் குறைவு செய்கின்றானோ அவன் பாவியாவான்.

(பரலுகிபாயா) ஒவ்வொரு ஊரிலும் சில கூட்டத்தினர் தீனுக்குரிய பெருமிதக் கல்விகளை கற்று அவ்வூர் வாசிகளின் அகத்தியமான காரியங்களை நிறைவேற்றியும் மற்றும் இஸ்லாமானவர்களுக்கு உபகாரிகளாகவும், காப்பாற்றக்கூடியவர்களாகவும் இருத்தல்வேண்டும். அப்படிப்பட்ட ஆலீம்களைத் தயாரிக்காத சமயத்து எல்லோரும் குற்றவாளியாவார்கள். எனவே, இவ்வாசகங்களால் ஒவ்வொரு நபர்களும் மௌலவிகளாகவேண்டுமென்று உலமாக்கள் சொல்லவில்லை. சிலர்தான் அவ்வாறான மௌலவிகளாக வேணுமென்று கூறுகின்றார்களென்பது நன்றாக விளங்கும். ஆகவே, காலக்ஷேபத்தின் கல்விக்கு இடையூறாகுமென்று கூறுவது எப்படிப்பொருந்தும். ஆகையால், தீனியத்தான சகல இல்முகளையும் கற்றுக்கொள்வதற்கான முயற்சிகள் செய்வித்து ஒவ்வொருவித இல்மிலும் பூர்த்திபெற்றுப் போதுமான அளவிற்குரிய ஒரு கூட்டத்தினரைச் சேகரம் செய்து அவர்களின் வாழ்நாள் முற்றும் தீனை விருத்தி செய்வதின் பிரசாரம் செய்வதைத் தவிர வேறுவித

வேலைகளில் ஈடுபடாமலிருக்கும்படி அமைக்கவேண்டும். இதுதான் பரலுகிபாயா என்ற வேதத்தின் கட்டளை. குர்ஆன்மஜீதில் இவ்விதக் கூட்டத்தினரைப்பற்றி அறிவிக்கப்பட்டிருப்பதானது, உங்களில் ஒரு கூட்டத்தினரை நன்மையான விஷயத்தளவில் பிரசாரம் புரிந்து நல்லவைகளை ஏவுகின்றவர்களாகவும், தீங்கை விலக்குகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டுமென்றும் ஹதீதுஷரீபில் அஸ்காபே சுப்பாவென்ற சஹாபாக்களின் விஷயங்களும் இம்மாதிரியேதான் என்றும் கூறப்பட்டிருக்கிறது. எனவே சகல முஸ்லிம்களும் இப்படிப்பட்ட உலமாக்களின் பொருட்டால் தீனியத்தான பிரசங்கம், கிதாபு நூல்களின் மூலமாய் தீனின் அவசியமான கருமங்களை நிவாரணம் செய்துகொள்ளவேண்டியது. இதில் சிறு பிள்ளைகள், காலக்ஷேபத்தின் கவலையற்றவர்கள், முதல்போன்ற யாவரும் படிக்கத் தெரிந்த உலமாக்களிடம் சென்று (அக்கீதா) இருதய விளக்கங்கள் முதலிய பலவிதமான மஸலாக்களை நூல்களின் மூலமாய் விளங்கிக்கொள்வதுடன் கூடியசீக்கிரத்தில் அதிக இல்முகளை கற்றுப் புதிதுபுதிதாய் ஏற்படும் விஷயங்களுக்குரிய கருத்துக்களை உலமாக்களிடம் ஒவ்வொரு சமயத்திலும் கேட்டுச் சீர்திருத்த ஏதுவாகும். மேற்கூறியவாறு படிக்க முடியாத காலத்து அவர்கள் வாரத்தில் ஒரு நாளோ அல்லது பிரதி தினமோ ஒன்று அல்லது இரண்டு மணி நேர காலத்தைக் குறிப்பிட்டு அந்தக் காலங்களில் நன்றாய் விளக்கிக்காட்டக்கூடிய ஆலீம்களை நியமித்து இவ்விதமான கித்தாப்புகளைவாசிக்கச்செய்து அதில் பொதிந்த விஷயங்களை நன்றாய் விளக்கும்படிச் செய்துகொள்ளும்பக்ஷத்தில் சற்றேறக்குறையக் கூடிய

சீக்கிரத்தில் மேலே சொல்லப்பட்ட பிரயோசனங்களை அடையலாம். பின்னும் அவசியம் ஏற்பட்டால் ஆலிம்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்வது சகல முஸ்லிம்களின் மீது ஏற்பட்ட வேதக்கட்டளையின் வாஜிபாகும்.

மேற்கூறியவழிகளால் மார்க்கச்சட்டங்களைத் தெரிந்து வாய்பேச்சினாலோ, கித்தாபுகளின் மூலமாகவோ தங்களின் வீட்டுப் பெண்களுக்கு ஓதவைத்தாகிலும், கேள்க்கவைத்தாகிலும் அமல்களைக் காட்டிக்கொடுக்கின்றவர்களாக இருத்தல்வேண்டும்.

### துன்யாதாரிகளின் இரண்டு கேள்விகள்.

தீனுடைய முக்கியக் கருமங்களுக்கு மௌலவிகளென்ற ஒரு கூட்டத்தினர் போதிய அளவிற்கிருப்பதுடன் அதற்கெனவே ஜாரியாக்கப்பட்ட மதரஸாக்களுமிருந்திருப்பதனால் எங்கள் பிள்ளைகளை மேற்கூறிய காரியங்களுக்காக நியமனம் செய்யவேண்டிய அவசியம் என்ன ஏற்பட்டுவிட்டது? மௌலவிகள் தீனை விர்த்தி செய்வதற்கும் எங்கள் பிள்ளைகள் துன்யாவை விர்த்திசெய்வதற்கும் போதுமெனச் சிலர் கருதுகின்றனர்.

### பதில்.

இது முற்றும் ஒப்புக்கொள்வதற்குரியதல்ல. ஏனெனில், நமது தேசத்தில் இரண்டுவகை இஸ்லாமியர் லட்சக்கணக்காக இருப்பதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். ஒவ்வொரு பட்டணங்களிலுள்ளவர்களும் இங்கிலீஷ் படிப்பையே பிரதானமாகக் கொண்டுவிட்டதால் ஹலால் ஹராமை எடுத்துரைப்போர்களைக் காணக்கிடைப்பதுமரிதாயிருக்கிறதென்பதை யாவரும் உணர்ந்திருக்கிறார்கள்.

இரண்டாவது கூட்டத்தினர் இங்கிலீஷ் படிப்பில்லாமலும் தீனுக்குரிய படிப்பில்லாமலும் குக்கிராமங்களில் நூற்றுக்கணக்காக இருக்கின்றனர்.

ஜனாஸா தொழுகையைக்கத் தெரியாமலும் ஹலாலான உயிர்ப்பிராணிகளை அறுக்கும் கருத்து இன்னதென விளங்கிக்கொள்ளாமலும் ஓதப்பட்ட கத்தியைக்கொண்டு அறுக்கின்றவர்களாகவும் இருக்கின்றனர். மேலும், முற்காலத்துப் பெரியோர்களின் வம்சங்களிலுள்ள சிலர் தங்களுக்கு வேண்டிய மேலான படிப்பில்லாமல் பீர்முரீது என்ற வேலையை நடத்தி சில கிராமங்களைத் தங்களின் பேராசையினால் பல புரட்டான வேலைகளைக்கொண்டு பிரமிக்கும்படிசெய்து தங்கள் ஜோப்புகளில் பணங்களை வாரி நிறப்புவதற்காக பல தவறான உபதேசங்கள் செய்து அவர்கள் தாங்கள் கெடுவதுமல்லாமல் ஏனையோரையும் கெடுக்கத் துணிந்துவிடுகின்றனர்.

மேலும், சிலவிடங்களில் இவ்விதமாக கேடுவிளைவிப்பவர்கள் இல்லாவிடினும் ஹிந்துக்களின்பழக்க வழக்கங்களை முஸ்லிம்கள் நம்பி பாபமான கிரியைகளை அனுஷ்டிக்கின்றவர்களாகவும் இருக்கின்றனர். சில இடங்களில் ஆலிம்களுக்கு மதிப்பில்லாமலும் அப்படி மீறி ஆலிம்கள் அங்கு போனசமயத்தில் அக்கிராமவாசிகள் ஆலிமினுபதேசத்தைக் கேள்க்கவராமலிருப்பதைக் கண்ணுற்று வருந்தித் திரும்புகின்றதையும்பார்க்கிறோம். எனவே, தற்காலத்தில் ஒவ்வொரு இடங்களிலும் உலமாக்களிருக்கின்றனர் என்று கூறி நாங்கள் மார்க்கக்கல்வி கற்கவேண்டிய அவசியமில்லை என்று கூறுவது தவறாகும். ஆகையால், மற்கூறிய காரியாதி

களுக்கு உலமாக்களை தயார்செய்துவைப்பதுதவிர வேறு எந்தக் காரியமும் வாஜிபாகுமோ என்பதை சற்று சிந்தனை செய்து பார்க்கவும். உலமாக்களன்றி ஏனையோரை மேற் கூறப்பட்ட காரியங்களை செய்யும்படி விட்டுவிட்டால் அந்த ஜாகில்களின் உபதேசத்தினுல் ஏற்படக்கூடிய நன்மையை விடத் தீங்கு அதிகமாகாதென்பதில் யாதேனும் சந்தேகங்க ளுண்டோ? ஆகையால், மேற்கூறப்பட்டுள்ள காரியாதி களுக்கு அவசியமாய் உலமாக்கள் வேண்டுமென்று நன்ருய் விளங்குகின்றபடியால் அதற்குரிய முயற்சியும் வாஜிபாகி விட்டது. மேலும், பாருங்கள்! தீனின் காரியங்களை முஸ் லிம்களின் ஏனையோரும் சீமான்களும் கவனிக்காது யாருக்கோ வந்த விருந்தென வாழாவிருக்கின்றனர். சீமான் களில் சிலர் நீடூழியான தர்மமென்றெண்ணி மதரஸாக்களை ஏற்படுத்தி இஸ்லாத்திற்கு உபகாரம் புரிவதாகத் தாவாச் செய்கின்றனர். ஆனுல், தங்களின் மக்களை அம்மதரஸாவுக்கு அனுப்பி இல்மை கற்றுக்கொள்ளச் செய்யும் விஷயத்தில் அறவே கவலையற்றவர்களாகக் காணப் படுவதுடன் அவர்களை டிப்டிகலெக்டர், சப்ஜட்ஜி, முனி சீப், பாரிஸ்டர் முதல்போன்ற வேலைக்கு அவசியமான கல்வியின் வழிக்கான ஆலோசனைகள் செய்கின்றனர்.

மௌலவிகளென்ற பதவியானது மிகுந்த கேவலமென் றெண்ணி, அப்படிப்பட்டவர்களை மிகத் தாழ்ந்த வகுப் பினராகக் கருதப்படுகின்றனர். இது பழக்க வழக்கத்தில் மேம்பட்ட பதவிக்குரியவர்களை மேம்பட்ட பதவிக்காகவும் தாழ்ந்த பதவிக்குரியவர்களைத் தாழ்ந்த பதவிக்காகவும் தெரிந்தெடுப்பதுபோலும்தான் தோன்றுகிறது. ஏனெ

னில், தீனுடைய வேலைக்குத் தங்களின் மக்களைப் போக விடாது தடுத்து ஏனையோரை அதற்காகத் தெரிந்தெடுப் பதைப் பார்க்கையில் இவர்களுடைய மனங்களில் தீனு டைய பணிவிடையானது மிகக் கேவலமாகத் தோன்று கிறதுபோலும் காணப்படுகிறது.

அந்தோ! இவை யாவும் ஆயிரக்கணக்கான கைசேத மென்றே கூறுவது மிகையாகா. இவர்களின் உள்ளத்தில் தீனுக்குரிய வேலைகள் முக்கியமென்றும் இஸ்லாமிய வர்க்கத் தினராக ஒத்துழைத்து நன்மையை தேடுகின்ற காரியங்க ளென விளங்கியிருக்கும்பக்ஷத்தில் ஏன் இவர்கள் பிள்ளை களை இச்சிறப்பான காரியத்தில் புகுத்திவைக்கும் சிந்தனை இல்லாதிருக்கின்றனர்? அல்லாஹுத்தஆலாவின் குது ரத்தை ஊன்றிக் கவனிக்கவும். எந்த வேலைகள் சங்கை யாளரின் கைவசமிருக்கின்றனவோ அவை உலகத்தாரின் பார்வைக்கு சங்கையாகவும் அவசியமானதாகவும் காணப் படும். தீனுக்காக உழைப்பதற்கு ஏழைகளைப்பார்க்கிலும் சீமான்களே அதற்குரிமைபெற்றவராவார். எனவே, தங்களின் பிள்ளைகளில் புத்தியின் கூர்மையுடையோராக நன்றாய் விளக்கக்கூடியவர்களாகவும் யோக்கியபாக்கிய முடையவர்களை தீனின் பணிவிடைக்காக (வக்பு) தத்தம் செய்துவிடவேண்டும்.

## இரண்டாவது கேள்வி.

எங்களின் பிள்ளைகளை மௌலவிகளாகச்செய்யுங் காலத்து அவர்களுக்கு எவ்வாறு உணவுப்பொருள்கள் கிடைக்குமென்பதே.

### பதில்.

இப்படிப்பட்ட சந்தேகம் சீமான்களுக்கு இருக்குமாகில் அவர்கள் தங்களின் பிள்ளைகட்கு இங்கிலீஷ் படிப்பிற்காகச் செலவிடயிருக்கும் ரூபாய் இரண்டாயிரமோ நாலாயிரமோ அவைகளை பூமிகளில்போட்டு தங்கள் மக்களுக்கே தானம்செய்து அதன் வரவைக்கொண்டு காலக்ஷேபத்தை கழித்து தீனுக்குரிய பணிவிடைகள் செய்யும்படிச் செய்யலாம்.

இம்மாதிரியான சந்தேகம் நடுத்தரத்தின் ஏழைகட்கிருக்குமாகில் அவர்களுக்கு ஜவாபு என்ன? குர்ஆன் ஷரீப் சூரத்துல் பக்ரா நான்காவது ருகூவு மூன்றாவது ஜுஃஉவில் அல்லாஹுத்தஆலாவின் திருவாக்கியம் என்ன சொல்லுகிறது?

(ஏ! மூமினானவர்களே!) எவர்கள் அல்லாஹ்வினுடைய மார்க்கத்திற்கென்றே தங்களை (முற்றிலும் அர்ப்பணஞ்செய்து) ஒதுக்கிக்கொண்டார்களோ அவர்கள் (தங்கள் சொந்த ஜீவனத்திற்குந் தேடக்கூட) பூமியில் நடமாட சாத்தியப்படாதவர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் யாசிக்காததனால், (அவர்களின் தரித்திர நிலைமையை) அறியாதோர் அவர்களை சீமான்கள் என எண்ணிக்கொள்ளுகின்றனர். அவர்களுடைய (வறுமையின்) அடையாளங் (களாகிய தாழ்ந்த ஆடை முதலானவை)களைக்கொண்டு அவர்களை நீங்கள் நன்கு அறிந்துகொள்ளலாம். (இவ்வாறான தரித்திர நிலைமையில் அவர்களிருந்தபோதிலும்) மற்றைய மனிதர்களிடத்தில் வருந்தியும் அவர்கள் கேள்க்கமாட்டார்கள். இவ்விதமான ஏழைகளாகிய அவர்களுக்கு நீங்கள் எதை

செவ்வுசெய்தபோதிலும் நிச்சயமாக அல்லாஹ் அதை நன்கறி(ந்து அதற்குரிய கூலியை உங்களுக்குத்தரு)வான்.

மேற்கூறிய திரு குர்ஆனின் வசனத்தைக்கொண்டு நாம் அறிந்துகொள்ளவேண்டிய விஷயம் என்னவென்பதை கவனிக்கவும். எவர்கள் தங்கள் காலக்ஷேபத்திற்குரிய தொழில்களைவிட்ட மற்றவர்களின் நன்மைக்காக உழைக்கின்றார்களோ அவர்களுக்குவேண்டிய அன்ன ஆகாரங்களையளித்து அவர்களை போஷித்துவருவதும் மற்றவர்கள் மீது கடமை (வாஜிபு) என்பதாக மேற்கூறிய வசனத்தை ஆதாரமாகக்கொண்டு மார்க்க சட்ட நிபுணர்களாகிய புகஹாக் கூறுகின்றனர்.

ஆகவே, காஜீ, அதிகாரி இவர்களுடைய அன்ன வஸ்திரம் இஸ்லாமியர்களால் சேகரிக்கப்பட்ட (கஜான) பைத்துல்மாலில் எடுத்துக்கொடுப்பது வாஜிபாகிறது. இக்காலத்துத் தீனின் பணிவிடையாளரான (முதர்ரிசீன்) உபாத்தியாயர் (வாகிசீன்) உபன்யாசம் செய்வோர் முதற் போன்றவர்களின் அன்னவஸ்திரம் சகலமுஸ்லிம்களின்மீது வாஜிபு என்பதில் சந்தேகம் யாதேனுமுண்டோ?

தவிர ஷெ வசனத்திலிருந்து பின்னும் அநேக விஷயங்கள் அறியக்கிடக்கின்றன. அவைகளாவன :—ஒன்று வது : தீனுக்குரிய பணிவிடைக்குடன்படுவோர் வியாபாரத்தில் செல்லக்கூடாது என்றும் உலாமாக்கள் காலக்ஷேபத்திற்குரிய வழிகளில் பிரவேசிக்காதிருத்தல்வேண்டும் என்றும் நன்றாய் விளங்குகின்றது.

மேலும் (அவாம்கள்) பாமர ஜனங்கள் உலமாக்கள் காலக்ஷேபாதிகாரியத்தில் மிகுந்த சோம்பேறிகளென்று

குறைகூறுவது கூறுபவர்மீதே குற்றமாகுமென்பதை தெளி வாக அறிந்துகொள்ளலாம்.

இரண்டாவது :—தீனின் பணிவிடையில் சிக்குண்ட வர்கள் சுவால் செய்வதை நீக்கி பத்தினித்தனத்தை பெரி தென்றிருப்பதால் அறியாதவர்கள் இப்படிப்பட்டவர்களை சீமான்களெனக் கருதுகின்றனர் என்ற (ஷெ வசனத்தின்) ஆதாரத்தினுல் உலமாக்கள் துன்யாதாரிடம் தங்களின் ஹாஜத்துகளைப்பற்றி தெரிவித்துக்கொள்ளாமல் சீமான் களைப்போல் தேவையற்றவர்களாகவிருத்தல்வேண்டும்.

மூன்ருவது :—தீனின் பணிவிடையில் புகுந்தவர்கள் மனிதர்களிடத்து அறவே சுவால் செய்யமாட்டார்கள் என்ற (தலீல்) ஆதாரத்தைக்கொண்டு துன்யாதாரிடம் பணங்காசுக்காக ஒருபோதும் சுவால் செய்யாமல் அல்லா ஹுத்தாஆலாமீது நன்னம்பிக்கை பூண்டவர்களாகவிருக்க வேண்டும் என்ற விஷயத்தைக்கொண்டு உலமாக்கள் எந்த நன்மையான காரியத்திற்கும் சந்தா வசூலிக்கப்படாதென்று கூறுவதற்கில்லை. ஏனெனில், 26 ஜுசுவு 7வது ருக்கூகில் அல்லாஹுத்தஆலாவின் திருவாக்கியம் என்ன சொல்லு கிறது? மெய்தான். அல்லாஹுத்தஆலாவின் பாதையில் செலவு செய்யும்படி அழைக்கப்படுவீர்கள் என்ற (தலீல்) ஆதாரத்தைக்கொண்டு இதின் வித்தியாசம் நன்ருய் விளக்கிக் காட்டப்படுகிறது.

நான்காவது :—தீனின் பணிவிடைக்காக முன் நின்ற வர்களை நீர் பார்த்து அப்படிப்பட்டவர்கள் பலக்குறைவான வர்கள் என்றும் எளியோரென்றும் வருத்தப்பட்டவர் கள் என்றும் அறிந்துகொள்வீர் என்ற (தலீல்) ஆதா.

ரத்தினுல் உலமாக்கள் சுவால் செய்யாதபோதிலும் இப்படிப்பட்டவர்களின் கோலத்தின் அறிகுறியை நன்ருய் உணர்ந்து அப்படிப்பட்டவர்களின் தேவைகளே நிறைவேற்றிவைப்பது சகல முஸ்லிம்கள்மீதும் ஏற்பட்ட கடமையாகும்.

ஐந்தாவது :— நீங்கள் நன்மையான காரியங்களில் எதைச் செலவு செய்கிறீர்களோ அதை உண்மையாய் அல்லாஹுத்தஆலா அறிந்திருக்கிருன் என்ற (தலீல்) ஆதாரங்கொண்டு உலமாக்களுக்குப் பணிவிடை செய்வது தங்களுக்குப் பிரயோஜனத்தைக் கொடுப்பதால் அப்படிப்பட்டவர்களின்பேரில் தாங்கள் செய்த நன்றியை எடுத்துக் காட்டக்கூடாது.

## உலமாக்கள்மீது துன்யாதாரின் கேள்விகள்.

உலமாக்கள் கௌரவம் வகித்தவர்களாய் வீடு, மதரஸா, பள்ளிகளில் உட்கார்ந்திருக்கின்றனர். தற்காலம் தங்களின் சமுகத்தார் நாசமாகும் காரணத்தைப்பற்றி ஒருசிறிதும் இரக்கமற்றவர்களாக இருப்பதுடன் வெளி சென்று வழிகெட்டவர்களே நேர்வழிக்கு அழைக்க முன்னேறுவதுமில்லே. சில மனிதர் இஸ்லாத்தை கைவிட்டவர்களாகவும் சிலர் மார்க்கச்சட்டங்களே அறவே விளங்கிக் கொள்ளாதவர்களாகவும் மார்க்கச்சட்டங்களே ஒருசிறிதும் லட்சியம் செய்யாதவர்களாகவும் மார்க்கத்தளவில் அழைக்கப்படுஞ் சமயத்தில் கேட்டுக்கொண்டு சீர்திருத்தமாகாதிருக்கின்றனரே இதைப்பற்றி உலமாக்களுக்கு கவலே என்பதே ஏன் இல்லே என வினவுகின்றனர்.

பதில்.

இதனைப்பற்றி விரிவாகவும் தெளிவாகவும் பல கிதாபு களில் விடையளிக்கப்பட்டிருக்கின்றது. எனினும், இவ் விடத்திலும் சிறிது கூறுவோம். தீனுல் இஸ்லாமின் சங்கதி அறவே தெரியாதவர்களுக்கு வீடுகள் ஊர்கள் தோறும் சென்று போதிப்பது கடமை என்றாலும் தற்கால நாகரீக முறையில் உலகமெங்கும் தீனுல் இஸ்லாம் இன்ன தென எல்லோருக்கும் அதன் ஆகமங்கள் விளங்கியிருப்ப தால் அந்த இடத்திலுள்ளவர்கள் உலமாக்களிடத்திற்குச் சென்று மார்க்கச்சட்டங்களை விளங்கித் தெரிந்துகொள்வது வேதத்தில் கூறப்பட்ட முக்கியமான கட்டளை என்பதை கவனிப்பீராக.

இரண்டாவது பதில்:—விஷயங்கள் இப்படியிருக்கச் சில உலமாக்கள் தேசசஞ்சாரஞ்செய்து உபதேசம் புரிந் தாலும் அவைகளை செவிசாய்த்துக் கேளாது பின்னடை வது அவர்களின் துரதிஷ்டம். தீனின் வழிகேடர்களை சீர்திருத்தும்படி உலமாக்கள்மீது குறைகூறுகின்றவர்கள் இப்படிப்பட்ட வழிகேடரைப் பார்த்து இன்ன இடத்தில் உலமாக்களிருக்கின்றனர், நீங்கள் அவர்களிடத்து சென்று மார்க்கத்தின் நேர்வழி பெற்றுக்கொள்ளுங்களென ஏன் அவர்களுக்கு இவர்கள் சொல்லியனுப்பக்கூடாது?

மூன்றாவது பதில்:—இக்காரியங்களுக்கெல்லாம் தீனின் உலமாக்கள் தானோ பாத்தியப்பட்டவர்கள்? மற்ற சீமான்களுக்கு இந்தப் பாத்தியமில்லையோ? உலமாக்களின் காலக்ஷேபத்தின் பொறுப்பை சீமான்கள் ஏற்றுப் போதிய

அளவு முதல்களைச் சேகரஞ்செய்து இதற்காகவே தனிப் பட்ட ஒரு கூட்டத்தின் உலமாக்களை சொந்தமாகத் தயார் செய்துவைக்கவேண்டியது. உதாரணமாக கிறிஸ்தவ மிஷனெரிகள் அதிகச் சம்பளங்களைப்பெற்று ஊரூராய்ச் சென்று பிரசாரம் புரிந்து புத்தகங்களையும் துண்டு பிரசுரங் களையும் எப்படி பரப்புகின்றனரோ, அதைப்போல் உலமாக் களுக்கும் காலக்ஷேபத்திற்குரிய போதிய அளவு பொருள் சகாயம் செய்து அவர்களை சீமான்களாக்கி இப்படிப்பட்ட மேலான வேலையை சித்தியாகும்படி செய்விக்கவேண்டியது சீமான்கள்மீது கடமையாகும்.

## துன்யாதாரர் மாணவர்மீது குறைகூறல்

தீனின் கல்வியை கற்கும் மாணவர்கள் இக்கல்விகளால் குறைந்த பதவிகளையடைந்து உலகின் காரியங்களின் முக்கியமான வகைகளை இன்னதென அறியாதவர்களாகியும் துன்யாவைச்சேர்ந்த வியாபார மஸலாக்களைக் கேட்டசமயத் தில் அதை விளங்கச் சக்திபெறாதவர்களாகியும் உலகக் காரியங்களை ஒப்புவிக்குங்காலத்து அதை ஒழுங்குடன் நடத்தும் திறமையற்றவர்களாகவும் காணப்படுகிறதே என்பதாம்.

## பதில்.

இவ்வினாவைக் கேட்போன் புத்தியினால் அறியக் கூடியதையும் அனுபோகத்தால் அறியக்கூடியதையும் ஒன்று சேர்த்துவிட்டதால் அதில் தப்பிதமிருப்பதை அறியவில்லை.

உண்மையில் இவ்விரண்டும் வெவ்வேறாகப் பாகுபாடு செய்யப்பட்டிருக்கிறது. எவ்வாறு உயரிய பதவியின்

புத்திமானுக்கு இன்ன ஷாப்பில் இன்ன ஜூத்தாவின் கிரயம் இன்னதென்று அவனுக்குத் தெரியாமற்போகுமானல் அவனுடைய புத்தி அதனல் குறைவுப்பட்டுப்போகுமா? ஒருபோதும் குறைவுபடமாட்டாது. புத்திமான்களில் நிறம்ப மேலானவர்களாகி சட்டங்களை தெரிவதில் நிபுணர்களென்ற ஹைகோர்ட்டு ஜட்ஜியும் ஒரு கேசின் சாரம் விளங்கிக் கொள்ளாததால் அவரின் புத்தி குறைவுபட்டுப் போகுமா? ஒருபோதும் குறைவுபடாது. இப்படியே நாம் இரவுபகலாய் அநேக விஷயங்களைப் பிரத்தியக்ஷமாய்ப் பார்க்கிறோம். இங்கிலீஷ் படிப்பில் பூர்த்தியடைந்து சர்டிபிகேட் பெற்றவர்கள், இன்ஸ்பெக்டர் தாசில்தார்போன்ற கீழ்பதவியின் வேலைகளைக் கற்றுக்கொள்ளாமல் துன்யாவின் படிப்பும் ஒன்ருகவேயிருக்க துன்யாவின்படிப்பாளனை அனுபோகமற்றவரென்றும் தீனின் படிப்பாளனை புத்தியற்றவனென்றும் சொல்லுவதானது என்ன புதுமையான அநீதம் எனவே தீனின் படிப்பாளிகள் துன்யாவின்புறம் ஒரு சிறிதளவு கவனிக்குங்காலத்து நீண்ட அனுபோகஸ்தர்களும் திடுக்கிடும்படி அற்புதமான நல்ல வேலைகள் செய்வார்கள். இதற்கு உதாரணம் தற்காலம் அதிகரித்திருக்கிறது.

இந்தமட்டிலும் சகல இஸ்லாமியரின்மீது விதிக்கப்பட்ட இல்மின் கடமையைச் சுருக்கிக் கூறப்பட்டது. மேலும், இதன் விபரங்களை அசல் கிரந்தங்களில் பொதிந்துள்ளதை உலமாக்களிடத்தில் கேட்டுக்கொள்ளலாம்.

உலமாக்கள் மாணவர்களின் சீர்திருத்தங்களைப்பற்றி அசல் கித்தாபுகளைக்கொண்டு விளக்கஞ் செய்யும் திறமை பொருந்தியிருப்பதாய் அவ்விஷயங்களை இதில் எழுதாதது

விட்டுவிட்டோம். ஆகிலும், ஒரு முக்கியமான அம்சத்தை மாத்திரம் கவனிக்கவேண்டும். சில உலமாக்கள் தலைமையைப் பெறுவதற்காக சீமான்களினிடத்து தனிப்பட்ட சினேகம்வைப்பதில் ஏனையோரிடம் கண்ணியமும் மரியாதையும் கீர்த்தியும் அதிகப்படுமென எண்ணி அவர்களுடன் கலந்துறவாடுதற்கான ஏற்பாடு செய்கின்றனர். உண்மை அப்படியல்ல. அநுபோகத்தில் பார்க்குஞ்சமயம் அநேகரின் எண்ணங்களில் இப்படிப்பட்டவர்கள் எல்லோரிடத்திலும் கண்ணியமற்றவர்களாகவே காணப்படுகின்றனர். உலமாக்களின் கண்ணியமானது என்னே! தங்களின் மூலக்கொள்கையை சீமான்களிடத்தில் ஒருசிறிதும் தயைபாராது எடுத்துக்கூறுவதும் தீனுக்குழைப்பதும் ஏழைகளினிடத்து நற்குணத்தின் சமரச நோக்கத்துடன் கலந்திருப்பதுமேயாகும். இப்படிப்பட்ட செயல்கள் இல்லையேல் அவர்கள் எல்லோரிடத்திலும் மரியாதையற்று வறுமையாளராவர். ஏனெனில், அவர்களிடத்து பணம் சேகரிப்பதின் பேரவாவால் முகஸ்துதிபண்ணுவதாகவெண்ணி அவர்களின் பார்வைக்கு இவர்கள் மிக்க கேவலமுடையவராகத் தோற்றப்படுவார்கள். மேலும், ஏதோ ஒருசமயத்தில் அவர்களிடம் இவர்கள் ஒருவஸ்துவைபெற்றுக்கொள்வாரேயானால் இவர்களின் மரியாதைபோய் சீமான் எளியோராகிய இருசாராரிடமும் இவ்வாலிமின் மஸலாக்களுக்கு அணுவளவேனும் நம்பிக்கையற்று உலகத்தாரின் தாட்சணியத்துக்காக இவ்வாறு சொல்லுகின்றாரென இவருடைய உபதேசத்தையும் மஸலாக்களையும் பொருந்திக்கொள்ள மறுப்பார்களெனவே இவர்களுடைய இல்மு அறவே பிரயோசனமற்றதாகிவிடும். மேலும்,

கீழ்க்கூறும் நாயகவாக்கியத்திற்கும் ஒப்பாகின்றனர். அதாவது. பிரயோசனப்படாத இல்முக்கு உபமானம் அல்லாஹுத்தஆலாவின் பாதையில் செலவுசெய்யாத பொக்கிஷம் எனவும் கியாமத்து நாளில் அல்லாஹுத்தஆலாவினிடத்தில் நிறம்பக் கெட்டவன் தன் இல்மைக்கொண்டு ஒரு பிரயோசனமும் பெற்றுக்கொள்ளாத ஆலீம் என்பதுவே என்று அபுஹுரைரா ரலியல்லாஹுஅன்ஹு தாரமி ரிவாயத்துச் செய்திருக்கின்றனர்.

உலமாக்கள் சீமான்களிடத்து மிகை நம்பண்ணுவதால் அவர்களிடம் காணும் கெட்டசெயல்களைப்பற்றி கண்டித்து சொல்லுவதற்கு இவர்களின் மனதில் ஓர்வித அச்சமுண்டாகிறது. ஏனென்றால், இவ்வாறு சொல்லுவதால் இரண்டு பேரின் மனங்களும் குன்றும். அச்சமபம் எப்படி இவர்களுக்கு நேசப்பான்மை மனதில் பதிவாகும்? சீமான்களின் தயவை ஆண்டவனின் தயவைப்போல் பாவித்து மார்க்கத்தின் காரியங்களைச்சொல்லி இந்த ஆலீம்கள் வாய்மூட நேரிடும். ஏனென்றால் இவர் முன்னம் மார்க்கத்தின் உண்மைகளைக் கண்ணியப்படுத்தி கெட்ட காரியங்களில் பொருத்தமற்றவராகவிருந்தார் பின் உண்மையைச் சொல்ல மனமஞ்சி கெட்டசெயல்களில் அவர்களுடன் இவரும் கலந்துகொண்டார். இப்போது தட்டிச்சொல்லாமல் அதைப்பற்றி மெதுவாகப் பேச ஆரம்பிக்கின்றனர். சீமான்கள் இந்நிலைமையைத் தெரிந்து தங்களின் நபுசுக்கு இணக்கமான மஸலாக்களை புரட்டிச் சொல்லும்படி கேட்பதற்கும் இந்த ஆலீம்கள் ஒப்பி அவர்கள் இஷ்டம்போல் பூர்த்திசெய்து கொடுத்து தங்களின் கல்பு உண்மையை விளங்குந் திறமை

பூண்டிருந்தும் அதை முற்றும் அழித்து வீணாய் நாசப்படுத்துகின்றனர். மேலும், உண்மையை அறிந்த ஆலிம்களிடம் விதண்டாவாதஞ் செய்து சீர்திருத்தத்தின் ஆதரவற்றவர்களாகிவிடுகின்றனர். இப்படிப்பட்டவர் உம்மத்தே முகம்மதியர் கூட்டத்தினரில் சைத்தானைக்கா ண அதிகமான தீங்கை விளைவிப்போராவார்கள். ஏனெனில், இவர்கள் உலகத்திலிருப்பதனால் சைத்தான் வேலையில்லாது ஒழிந்திருப்பது ஓர் ஆச்சரியமல்ல நான் எனது கண்ணினால் துன்யாவைக்கருதிய ஒரு ஆலிம் எழுதிய பத்துவாவை பார்த்திருக்கிறேன். அதில் 1000 ரூபாய் வாங்கிக்கொண்டு சொந்த மாமியாரை நிக்காஹுச் செய்வது ஹலால் என்றெழுதியிருக்கின்றனர். இப்படிப்பட்ட ஆலிம்களின் கல்புமிருகங்களின் கல்லைப்போல்மாறுமென்று அப்துல்லா இப்புனுமஸ்ஹூத்தவர்கள் சொன்னதாக அபூதாவூத் அவர்கள் நாயகத்தின் திருவாக்கியங்களை அருள் செய்கின்றனர். நபிகளின் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின்வாக்கியமானது பனு இஸ்ராயீல்கள் பாவங்களுக்காக தலையிட்ட சமயத்தில் உலமாக்கள் விலகும்படி சொல்லவிலகாத காரணத்தால் அவர்களுடன் அந்த ஆலிம்களும் கலந்துகொண்டு உண்பதும், குடிப்பதுமாகவிருந்தனர். அச்சமயத்தில் இவர்களின் கல்புகளை சிலருக்கு சிலர்களை முரண்படும்படி செய்வித்து ஆண்டவனின் கட்டளை மீறினதற்காக ஹஜரத் தாவூது, ஈசா அலைஹிமுஸ்ஸலாம் இவர்களுடைய கவுமுகளுக்கிட்ட (லஃனத்) சாபத்திலீடுபட்டார்கள். ஆதலின், இப்படிப்பட்ட எல்லாக் கெடுதியும் துன்யாவுடையவர்களைக் கருதுவதனால் உண்டாகுமென்பதை உண்மையான ஹதீதுகளில் பழிக்கப்பட்டிருக்கிறது.

அல்லாஹுத்த ஆலாவிடத்தில் நிறப்பங் கோபிக்கப் பட்டவர்கள் சீமான்களைச் சந்திக்கிறவர்களாயிருக்கும் என்ற நாயக வாக்கியத்தை அபுஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் இபுனுமாஜா அவர்கள் கூறியதாகச் சொல்லுகின்றார் எனவே, உலமாக்கள் சீமான்களிடம் கலந்துறவாடாதவரை தீனைக் காப்பாற்றும் நம்பிக்கைபூண்ட அமானிகளாகவிருப்பார். அவர்களுடன் கலந்துறவாடும் பட்சம் அந்த ஆலிம்கள் தீனின் திருடர்கள். இப்படிப் பட்டவர்களைப்பற்றி பயந்துகொள்ளுங்கள் என அநேக ஹதீதுகள் கூறப்பட்டிருக்கிறது.

முக்கிய கவனிப்பு.

தீனைக் கருதிச் சீமான்கள் உலமாக்களிடம் சென்றாலும் தீனியத்தான அகத்தியத்திற்கு உலமாக்களை அழைக்கப்பட்டாலும் உலமாக்கள் வெகுமதியைக் கருதாமல் சுய உரிமை பெற்றவர்களாய் தீனின் உண்மையை எடுத்துரைக்கத்திறமையிருக்குமானால் சீமான்களிடத்து உலமாக்கள் கலந்துறவாடுவதை தீனுக்கென்றே பாவிக்கப்படும். ஏனெனில், அவர்களுடன் சேராவிட்டால் தீனியத்தான ஆகமங்கள் அவர்களுக்கு எப்படித் தெரியும்?

இப்படிச் சேருவதற்குரிய ஷருத்து அப்படிப்பட்ட ஆலிம் தனது கல்பை ஆண்டவன்பக்கம் (தவக்கல்) ஒப்புவித்துப் பிடிவாதமுடையவராக இருக்கவேண்டும். நப்சின் அவாவை மாற்றுவோராகவுமிருக்கவேண்டும். இப்படியுள்ள 2 ஷருத்தின்படி நடக்கமுடியாதவர்கள் சீமான்களிடம் அறவே செல்லக்கூடாது. இது மிக்க சிலாக்கியமானவை.

. . .

தீனைப் பரப்புவதற்காக மற்றைய உலமாக்கள் போதிய அளவிலிருக்கின்றார்களல்லாமல் உலமாக்களுடைய சிறிய நூல் பெரிய நூல்களும் போதிய அளவிலிருக்கிறது.

எனவே மேற்கூறிய இரண்டு ஷருத்தும் இல்லாத ஆலிமுக்கு அவசியமாவது, சீமான்களைவிட்டு நீங்கியிருக்குங்காலத்தில் அவர்களை கேவலமாகவும் தங்களை மேலாகவும் எண்ணாது துன்யாவின் அவஸ்தையில் அகப்பட்ட அறியாத்தன்மையையுணர்ந்து அவர்களின்மீது இரக்கங்காட்டி துஆச்செய்வோர்களாக இருக்கவேண்டும். மேலும், தன்னை தீனின் பலமற்ற வியாதியஸ்தனைப்போல் பாவிக்க வேண்டும். இதற்கு உவமானம் ஒருவனுக்கு தனது சரீரத்தில் இரத்தங்கெட்டு மெலிவடைந்த வியாதியஸ்தன் மற்ற தொத்துவியாதியஸ்தனிடம் அணுகாது காத்துக்கொள்வதுடன் அந்த தொத்துவியாதியஸ்தன்மீது கோபியாது இரக்கங்காட்டி தான் வியாதியில் பலக்குறைவாயிருப்பதைப்பற்றி அவனைவிட்டும் பாதுகாத்துக்கொள்கிறானே அதுபோல் துன்யாவின் சீமான்கள் அறியாத்தன்மையில் பாவங்களில் ஈடுபட்டால் அவர்களுக்காக இரக்கங்காட்ட வேண்டியது. மேலும், தாங்கள் இப்படிப்பட்ட பாவங்களுக்கு ஆளாகாமல் தப்பித்ததற்குப் பெருமை பாராட்டாமல் அல்லாஹுத்தஆலாவுக்கு (ஷுக்ர்) நன்றி பாராட்டுகின்றவர்களாய் அவர்களுக்காகத் துஆச்செய்யவேண்டும். ஆனால்,ஒருவன் தீனியத்தானகாரியத்தின்பேரில் முரண்பாடு செய்கிறவனாகவுந் தீனுடையவர்களுக்குத் தன்னைப்பெருமையாகப்பேசி மற்றவர்களின்பேரில் கோபம்கொள்வானேயானால் அவன்பேரில் கோபம்கொள்வது இவர்களின்மீது வாஜி

பாகவும் (இபாதத்) வணக்கமாகவும் அது அல்லாவுக்காக கோபங்கொள்வதாகவிருக்கும். மதரஸாக்கள் மாணவர்கள் வாஇஸீன்கள் தீனிபத்தான வேலைகளின் சந்தாவின் சீர் திருத்தங்கள் முதற்போன்றவைகளை அசல் கித்தாபுகளில் அதன் விபரங்களைத் தெரிந்துகொள்ளவேண்டியது.

## துன்யாதார் ஆலிம்கள்மீது கொண்டிருக்கும் தப்பபிப்பிராயம்.

சில துன்யாதாரின் கேள்வியானது மௌலவி, ஆலிம் களாவதால் குறுகிய எண்ணம் தைரியமின்மை தழுமையை அழகு செய்தல் குறுகிய நோக்கம் கேவலமடைதல் உலக சீர்திருத்தக்குறைவு முதல்போன்ற கெட்ட குணங்கள் அறபி கற்கும் மாணவர்களிடம் இதன் நிலைமையை சீர் தூக்கிப்பார்க்கையில் இதன் விஷயங்கள் யாவும் நன்றாய் விளங்கும். தீனிபத்தான கல்விகளால் அதைரியம் முன் னேற்றத்தின் பிரியம் அற்றுப்போவதின் நிமித்தம் எங்கள் பிள்ளைகளுக்கும் இக்கெடுதிகள் ஒருசமயம் நேரவுங்கூடும். என்ற அச்சத்தால் அவர்களை மௌலவிகளாகச் செய்வதை நாங்கள் அழகாக்கிக்கொள்ளவில்லை என்பதாம்.

இதுதான் துன்யாதார் தீனுக்குரிய இல்மின்பேரிலும் உலமாக்கள்பேரிலும் வைத்திருக்கும் தங்களின் அபிப் பிராயம். எனவே, ஜவாபு இவர்கள் அச்சட்ட திட்டத் தின் உண்மைகளை நன்றாய் விளங்கி அறிந்துகொள்ளும் திறமையற்றவர்கள் இதை லேசாக மதித்துத் தங்களின் சாட்சியை சரியாய் ருஜூப்பிக்காமல் வெகு வேகமாய் முடிவுசெய்துவிட்டனர்.

இது இவர்களுக்கு விளங்கிக்கொள்ளும் சக்தியற்ற உண்மையை இன்னதென்றுணராமல் சந்தேகங்களை பூஜிக்கும் வெளிப்பார்வை நிறைந்த திருஷ்டியற்றவர்களென்று குற்றத்தை அவர்கள்பேரில் முடிவுசெய்வதற்கு என் முற்றும் பொருந்தாது? எனவே, தற்கால உண்மையின் நிலைமையை விளக்கி காட்டுவோம். எதை உலமாக்களின்மீது குற்றமென்று தீர்மானம் செய்கின்றீர்களோ அதன் உண்மையின் வியாக்கியானம் இன்னதென்று இங்கு குறிப்பிடுதல் அவசியமாகவிருக்கிறது. இவ்வாறு கேட்கும் சமூகத்தினர் உண்மையான வியாக்கியானங்களில் அநுபோகமற்று இல்முடையவர்களின்மீது இக்குறைகளை பிரஸ்தாபிக்கின்றார்களா?

அல்லது, உண்மையான வியாக்யானங்களைவிட்டுத் தங்களின் அநுபோக சக்தியினால் முடிவுகட்டுகின்றனரா எனக் கவனிக்கும் சமயத்து இக்கேள்வி கேட்கும் சமூகத்தினர் சொற்செயல் யாவும் சீர்தூக்கிப் பார்க்குங்கால் துன்யாவின் சம்பந்தப்பட்ட முதல்களை விர்த்தி செய்யாதது தாழ்ந்த எண்ணமென்றும், உலகத்தின் முன்னேற்றங் கருதாது கிடைத்த அளவு போதுமென்றிருப்பது தைரியமின்மை என்றும், குணங்களின் பெருமை தலைமையின் பதவி வகிக்காது நடையுடை பாவனையில் சாந்தமாகவிருப்பது தழுமையை அழகு செய்தவர்களென்றும், தனக்கும் பிறருக்குமுள்ள பாத்தியத்தை பிரித்தறிவதை குறுகிய எண்ணமென்றும், அனுவசியமாய்ச் செலவிடாதது கேவலஸ்திதியென்றும், துன்யவியத்தான வீண் விஷயங்களில் ஈடுபட்டு மனக்களிப்படையாத காரணத்தால் தன் காரியங்

கள் தவறிப்போவதைக் கண்ணுற்று விசனிக்காத உலக சீர்திருத்தத்தின் முயற்சியின் திறமை இழந்தவனென்றும் பேர்வைத்துக்கொண்டனர். மேலும், மிகுந்த உலமாக்களில் இக்குணங்களைப் பார்த்து இவைகள் கெட்ட குணங்களெனப் பழிக்கச் செய்கின்றனர். இவைகள் யாவும் உலமாக்களிடம் பொருந்தியிருப்பது உண்மைதான்.

ஏனவே, இப்படிப்பட்ட காரியங்கள் யாவும் புகழப்பட்டதா? அல்லது இவர்களின் எண்ணங்களுக்கு முற்றும் மாற்றமாய் இகழப்பட்டதா? எனக்கவனிக்கையில் கேட்பவர்கள் இஸ்லாமியராகவிருப்பத்தால் இவர்களுக்கு குர்ஆன் ஷரீபு ஹதீது ஷரீபு இவைகளின் பயிசலே போதுமானதாயிருக்கிறது. குர்ஆன்ஷரீபில் 3-வது ஜுஸுவு 9-வது ருக்கூஉவில் அல்லாஹுத்தஆலா என்ன சொல்லுகிறான்? மனிதர்களுக்காக நபுசின் இச்சிக்கப்பட்டவைகள் பெண்கள், ஆண் பிள்ளைகள், பொன், வெள்ளி, பெருத்த திரவியம், அடையாளமிட்ட குதிரை, ஆடுமாடு ஒட்டகம், பயிர்பச்சை அலங்கரிக்கப்பட்ட இவ்வஸ்துக்களாக இருக்கிறது. மற்றொரு ஆயத்தின் கருத்தாவது :—சொற்ப வயதான துன்யாவில் நேர்வழியைவிட்டு விலகியவர்களின் வேலையின் முயற்சி நல்லதென எண்ணுகின்றவர்கள் நஷ்டவாளராகவிருக்கும். மேலும், மற்றொரு ஆயத்தின் கருத்தாவது :— கண்டிப்பாய் பெருமையின் நடைநடக்கும் பெருமையாளரை அல்லாஹுத்தஆலா உவந்துகொள்வதில்லை. மற்றொரு ஆயத்தின் சாரமாவது, ரஹிமானுடைய அடியார்கள் பூமியின்பேரில் மெதுவாக நடப்பார்கள். அவர்களை மடையர்கள் எதிர்ப்பார்களாகில் அவர்களுக்கு சலாம் சொல்லி

விலகிக்கொள்வார்கள். மற்றொரு ஆயத்தில், உங்களுக் கிடையில் உங்கள் முதல்களை அநீதமாய்ச் சாப்பிடாதீர்கள். மற்றொரு ஆயத்தில், முதலை வீண்விரயம்செய்கின்றவர்கள் ஷைத்தானின் உடற்பிறப்பாயிருக்கின்றனர். மேலும், ஹதீதுஷரீபில் நபிகள்நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவ ஸல்லமவர்கள் கூறியதாவது:— மூமினாகிறவன் சாந்தமுள்ள கொடையாளனாகவிருப்பான். (முனாபிக்) நயவஞ்சகன் ஒன் றும் ஈயாத மோசக்காரனாகவிருப்பான். இவைபோன்ற ஆயத்துகளும் ஹதீதுகளும் காணக்கிடக்கிறது. இவை களை சீர்தூக்கிப் பார்க்குஞ் சமயத்து உலமாக்களினிடத்தில் இப்படிப்பட்ட குணங்கள் நிறைந்திருப்பது புகழப்பட்ட வைகளா? அல்லது இகழப்பட்டவைகளா? என்பது நன்கு புலனாகுமன்றோ. மேலும், தன்யாதாரர்கள் புக ழப்பட்ட குணங்களை இகழப்பட்ட குணங்களென அபிப் பிராயங்கொண்டு குர்ஆன் ஹதீதுகளில் பயமுறுத்திய பெருமை மேலெண்ணம் அகப்பெருமை, பிறர்க்குரிய பாத்தியங்களை நஷ்டப்படுத்துதல், வீண்விளம்பரம், தன் யாவை யுவப்புவைத்தல், ஆகிறத்தை மறத்தல், முதற் போன்ற கெட்ட குணங்களையே மேன்மைபடுத்திக்கொண் டனர்போலும். எனவே, ஷரஇயத்தான மார்க்கத்தின் பைசல்களை ஒப்புக்கொள்ளுகிறார்களா அல்லது நல்லதை கெட்டதென இட்டுக்கட்டிப் பைசல் செய்ததை ஒப்புக் கொள்ளுகிறார்களா? எனவே, யாதொருவன் இஸ்லா மியத்தின் பைசலைப் பொருந்திக்கொள்ளவில்லையோ ஹுக மாக்களென்னும் நிபுணர்களின் ஹிக்மத்திலும் குணம் சாந்தத்தின் அரிய நூல்களில் இவர்கள் கருதிய பழிப்பு

களைப்பற்றி அந்நூல்களில் புகழப்பட்டவைகளா? அல்லது இகழப்பட்டவைகளாவென்பதை ஊன்றிக்கவனித்து நன்கு விளங்கிக்கொள்வீர்களாக. அக்குணசாந்த நூல்களில் போதிய அத்தாட்சி சரியல்லவென்றும் தங்களின் சொல்லே போதுமான அத்தாட்சி என்றும் கருதுவீர்களேயானல் நாமும் அன்பியாக்கள் ஹுகமாக்கள் என்ற நிபுணர்களின் நேர்வழியை ஆதாரமாக்கி நம்முடையசொல்லே நமக்கு அத்தாட்சியெனவாதிப்பதற்கு ஏன் நமக்கும்பாத்தியமில்லை. இப்போது பழிக்கப்பட்ட குணங்களைப் பாருங்கள். அவர்களுக்கு தீனுடைய இல்முகள் இல்லாதிருப்பதோடு ஆகாத பாத்திலான இல்முகளிலோ அல்லது பாத்திலானவர்களின் சிநேகிதத்தாலோ ஏற்படும் குணங்கள் முகவுரையாக காருணியத்து, பிர்( ஔளிபத்து ) அகீதம் புத்திக்குறைவு எனவே இதன் கருத்து குர்ஆன் ஹதீதுகளில் அச்சம் பூட்டிய பேராசை மேலெண்ணம் முதற்போன்றவைகளாக இருக்கிறது. ஆகையால், தீனுடைய உலமாக்களை தாழ்ந்த நிலைமையுடையோர்களென்று கருதியழைப்பார்களேயானல் இப்படி அழைக்கும் கூட்டத்தினரை நாமும் கட்டாயமாய் (காரூன்பிர்ஔளன்) என்று அழைப்பதற்கு என்னதடை? அப்படியில்லையேல் உண்மையான கருத்தை சரியாய் விளங்கும்பட்சம் பிறருக்கு பிரயோஜனத்தைத் தராமல் தன் வயிற்றுப்பிழைப்பே பிரதானமெனக்கருதினவர்கள் தாழ்ந்த எண்ணமென்றும் கஷ்டங்களை சகியாமல் அவசியமான கடமைகள் தப்பிப்போனபோதிலும் சுகத்தையடைவதன் சிந்தனையிலிருப்பதுவே அதைரியமெனவும், முதலைக்கருதி மரியாதை இழப்பதும் மானம், வெட்கம் இவைகளைப்

போக்குவதைத்தாழ்மைத்தனமடைவதெனவும் நேரங்களை கவனியாது பழுதாக்குவதோடு (முஆஷராத்) குடும்பபாரத்தின் சட்டத்தை கவனியாது அன்னியர்களுடைய கடமைகளை நாசப்படுத்திவைப்பது சீர்திருத்தத்தின் பலக்குறைவெனவும், துன்பாவுடையவர்கள் நினைக்கின்ற கேள்விகளாயிருக்குமானால் சந்தேகமின்றி இவைகள் யாவும் பழிக்கப்பட்டவைகள்தான். ஆனால், இல்மை கற்ற சிலரிடத்து இப்படிப்பட்ட குணங்களை நாமும் கண்கூடாகப் பார்க்கிறோம். எனவே, அதில் கவனிக்கவேண்டிய அவசியம் இப்படிப்பட்ட கெட்டகுணங்கள் (அல்லாஹுத்தஆலா அணுகாதிருப்பானாக.) தீனுடைய படிப்பினால் உண்டானதா அல்லது வேறுவகையினால் உண்டானதாவென யூகிக்கவேண்டும். எனவே, பைசலை இலகுவில் தீர்ப்புச்சொல்ல இயலாமலிருக்கிறது. அதாவது:—இப்படிப்பட்ட குணங்கள் சகல கல்விமான்களிடத்திலுமிருப்பதா அல்லது சிலரிடத்து காணப்பட்டும் சிலரிடத்து காணப்படாமலுமிருக்கிறதா என்று கவனிக்கையில் எல்லோரிடத்துமிருப்பதாகக் கருதுவது முற்றும் தப்பிதமென்றே கூறவேண்டும்.

பின்பு இரண்டாவதுவகையான சிலரிடத்து காணப்பட்டவைகள் உண்மையென நிரூபணமாகிவிட்டது. இவை யாவும் தீனுடைய படிப்பினால் ஏற்பட்டவைகளேயல்ல. தீனுடைய படிப்பினால் என்று யூகிக்குங்கால் அப்படிப்பட்ட கெட்டகாரியங்கள் யாவும் இக்கல்வியறிந்த சகலரிடத்தும் காணப்படல்வேண்டும். அப்படியில்லையேல் இவைகள் வேறு வகைகளினாலேயுண்டாகிறது. அப்படிப்பட்ட வேறு வகைகள் எனது அபிப்பிராயத்திற்குத்

தோன்றுவது, என்னை சில குடும்பத்தார்களிடத்து குறகிய எண்ணமும் கெட்ட குணங்களும் நிறைந்து காணப்படுவதால் அப்படிப்பட்ட குணங்கள் இவர்களிடத்தும் காணப்படுகிறது. சிலசமயம் இவர்களின் பிரியத்தினுலோ அல்லது சிலர் சாப்பாடு துணிகள் இலவசமாய் கிடைப்பதை முன்னிட்டு தீனுடைய கல்வியை கற்க முயற்சிக்கின்றனர். நற்குணங்களை பெறுவது பிறவிச்செயலாகவோ அல்லது, தனித்து அதற்கென முயற்சித்து அதையடையாதவரை அப்படிப்பட்ட குணங்கள் படிப்பைக்கொண்டு மாத்திரம் பூர்த்தியாகவேமாட்டாதென்பது அனுபோகத்தில் நன்ருய் விளங்கத் தெரிந்தவிஷயம். எனவே, அவ்வித நற்குணத்தின் சீர்திருத்தத்திற்காக தரிகத்துடைய மகான்கள் பல கிரந்தங்களை வரைந்திருக்கின்றனர். இதன்படி நடப்பதற்கு செய்குமார்களின் சொல் செயல்களுக்குக் கட்டுப்பட்டு (பைஅத் முரீத்) இதன் கருத்து செய்குமார்களுக்கு பணிவிடை செய்வதே. ஆனுல், இப்படிப்பட்ட மனிதன் பிறவியில் தனது குடும்பத்தார்களின் கேவல நிலைமையின் குணத்தையடைந்து எந்த சமயத்திலாகிலும் ஒருவேளை பெரியோர்களின்சாவகாசத்திற்குள்ளமையாது தனிப்பட்ட கல்வியை பயின்றுகொள்வதினுல் நற்குணங்களையடைவதற்கு வழியில்லாது அப்படிப்பட்ட மனிதனுக்குக் கெட்ட குணங்கள் அடிக்கடி மேவி, அவன் செயல்களில் கெடுதிகள் விளையுமென்பதில் ஒரு சந்தாபமே இல்லை. ஆனுல், இவைகளை உதாரணங் காட்டிப் பார்க்கின்றவர்கள் சகல உலமாக்களின்பேரிலும் ஒரே முடிவு செய்துவிடுகிருர்கள். எனவே, மேங்குல வம்சத்தாணையோ பிறவிக்குணத்துவம்

சத்தானையோ பெரியோர்களிடமிருந்து சீர்திருத்தமடைந்த ஆலிம்களையோ ஏன் இவர்கள் கவனிப்பதில்லை. இவர்களைப் பார்க்குங்காலத்து இப்படிப்பட்ட குணங்கள் படிப்பினால் உண்டாகாமல் வேறு காரணங்களால் ஏற்படுகிறதென்று தெரியவரும். கைசேதப், மேல் சில வம்சத்தினர் இங்கிலீஷ் படிப்பை உடைவிரிப்பாகச் செய்துகொண்டார்கள்.

அறபிக் கல்வியை பெரியோர்களிடம் சென்று சீர்திருத்திக்கொள்ளாத குக்கிராமத்து தாழ்ந்த வம்சத்தினர் அதிகமாய் படிக்கப்போவதின் காரணத்தால் அநேக ஆலிம்களை இப்படிப்பட்ட கேவல நிலைமையில் நாம் பார்க்கிறோம்.

எனவே, உண்மையில் தீனுடைய இல்மாகிறது இவர்களை எந்தமட்டிலும் சீர்திருத்தம் செய்கிறது? தீனுடைய இல்மு இவர்களுக்கில்லாதிருக்கும்பட்சம் படிப்பில்லாதவர்களைப்போல் இவர்களும் சீர்திருந்தாது நிறம்பவும் கேவல நிலைமையில் பார்க்கலாம். எனவே, தீனுடைய படிப்பாகிறது இவர்களைச் சிறுகச் சிறுகச் சீர்திருத்தஞ் செய்திருக்க தன்னுடைய இல்மினால் சீர்திருத்தம் குறைவாகிறதென்று சொல்வது எப்படி ஒப்பும். எனவே, இப்படிப்பட்ட தாழ்ந்த வகுப்பினர் இங்கிலீஷ் படிக்குங்காலத்து அதிகமான கெடுதிகளை அடைவார்கள் என்பதற்கு ஏதேனும் சந்தேகங்களுண்டோ? ஏனெனில் தீனுடைய படிப்பினால் அநேகமான நற்குணங்கள் விளைகின்றன. இங்கிலீஷ் படிப்பிலோ ஒரு சிறிதளவேனும் நற்குணங்கள் கிடையாது. ஏனெனில் இவர்கள் தீனுடைய இல்முகளை விட்டுப் புறப்பட்டதால் இழிகுலத்தாலீம்க

ளென மெஜார்டிப் பேர்வழிகளால் மற்ற உலமாக்களின் பேரில் கெட்ட எண்ணம் கொண்டுவிட்டனர். அம்மேல் குலத்தோர்கள் தீனுடைய இல்மில் முன்னோக்கி தங்களின் பிள்ளைகளை அதில் தேற்சிபெற வைக்குங்காலத்து மேல் குலத்தோரின் பிறவி நற்குணஞ் சார்ந்த அநேக உலமாக்கள் தோன்றி இக்கெட்ட குணங்களை யொழித்து தீனுடைய இல்முக்கு யாதொரு அவமானங் குறைவுகள் ஏற்படா வண்ணம் பாதுகாக்கலாம். அதினும் சொந்தமாய் மேல் குலத்தோரின் உலமாக்கள் தரிகத்துடைய ஷைகுமார்களின் சகவாசத்திலிருந்து சீர்திருத்தம் அடையும் சமயத்து இவர்களின் குறுகிய நோக்கமும் தைரியமின்மையுமுடைய வர்களை யாரையேனும் காண்பியுங்கள் பார்க்கலாம். இவர்களுக்கு சீமான்களின் ஆடையோ, சாமான்களோ இல்லாத காலத்து அவர்களின் மேம்பாட்டை ஹஜரத் ஷிராஸ் ரஹமதுல்லாஹி அலைஹி பார்சியில் சொல்லியிருக்கும் கவியின் கருத்தின்படி அல்லாஹுத்தஆலாவின் பேரின் பத்திலிருப்பவர்களை கேவலமான பக்கீரெனக் கருதப்பட மாட்டார்கள். இவர்கள் கிரீடமில்லாத இராஜாக்களாக விருக்கின்றனர். நான் பேரின்பவீட்டின் பக்கீராகவிருக் கிறேன், என்னை பேரின்பப்போதையில் பார்ப்பீர்களேயா னால் வானத்தின்பேரில் செல்வம் பொழிந்தவர்களாகி நக்ஷத்திரங்களுக்கெல்லாம் அதிகாரம் செய்வோர்களாகக் காண்பீர்கள். முவஹ்ஹிதென்ற அத்வைதக்காரனின் காலின்மீது தங்கத்தைக் குவித்தாலும் என்னை, அவன் சிரமீது கூரியவாளை வைத்தாலும் தான் என்னை, அவன் திடசித்தனாகி ஒருவரின் அச்சமோ ஆதரவோ தேடாமல் நிரபராதி

யாய் விளங்குவான். இதுவே தௌஹீதின் மூலக்கொள் கை, அடிப்பீடமென்ற கருத்தென நன்றாய் விளங்குதல் வேண்டும். பின்பு, நான் கூறிக்கொள்வது என்னே? தீனு டைய இல்மில்லாமலே மேம்பட்ட குணங்கள் நிறைந்த நுண்ணிய பார்வை, விரிவான ஆராய்ச்சி, ஒழுங்கின் சீர் திருத்தம், இப்படிப்பட்ட சகல வேலைகளிலும் நடுநிலைமை வகித்தல், ஒழுங்கான வார்த்தைகளைப் பேசும் திறமை போன்ற நற்குணங்கள் ஏற்படுவது மிக அரிதாயிருக்கும். ஏனெனில், படிப்பற்ற சீமான்களிடத்து இப்படிப்பட்ட குணங்கள் அறவே கிடையாது. எனவே, முதலின் செல் வத்தால் முகப்பூச்சுக்காரர்கள் இவர்களைச் சூழ்ந்துகொண்டு வரைகடந்து புகழ ஆரம்பிக்கின்றனர். இதனுல் இச் சீமான்களின் வடுக்கலான இழிகுணங்கள் யாவும் செல்வச் செறுக்கினுல் மறைவுபட்டுப்போகின்றது எனவே நுண்ணிய அறிவாளரின் பார்வையில் இவைகள் மறையாது நிலைவி அன்னிலைமையில் மரியாதை இழந்தவர்களாய் இச்சீமான் களானோர் பழிக்கப்பட்டவர்களாய் காணப்படுகின்றனர். இவர்களின் கெட்ட குணங்களைப் பாமரர்களும் தெரிந்து வெறுப்படைகின்றனர். ஆனுல், இவர்களின் செல்வச் செறுக்கின் பயத்தால் கண்டித்துச் சொல்வதற்கு முடியாம லிருக்கிறது. சிலசமயத்து இவர்களின் முதுகுக்குப் பின் னிருந்தும் பேசிவிடுகின்றனர். எனவே, இச்சீமான்களின் சகல பழிப்புகளும் கியாமநாளில் திரைகளை எடுக்கப்பட்ட சமயம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் பிரத்தியக்ஷமாய் வெளுத்துவிடும். ஆகையால், ஆண்டவனுடைய கிருபை யைக்கொண்டு தீனுடைய இல்மினுல் கெட்ட குணங்கள் உண்டாகிறதென்ற சந்தேகம் இதனுல் முற்றும் அறவே எடுபட்டுப்போய்விட்டது.

## பெண்களுக்குப் படித்துக்கொடுக்கும் சீர்திருத்தம்.

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருவாய் மலர்ந்த மொழியின் சாரம் என்னை? இல்மை தேடுவது ஒவ்வொரு ஆண் பெண்கள்பேரிலும் கடமை என்ற வேத விதியான பரலாகவிருக்கிறது. பெண்களுக்குப் படித்துக்கொடுப்பதில் மூன்றுவிதமான மனிதர்கள் அபிப்பிராய பேதப்படுகின்றனர். பெண்களுக்கு படித்துக்கொடுப்பதைப்பற்றி மாறுதல்கள் செய்வதும் இல்லை. அதற்கான உதவியும் செய்வதுமில்லை. அதற்குரிய அபிவிருத்திக்கான முயற்சியும் செய்யாமலிருக்கின்றனர் ஒருவகையார். இரண்டாவது வகையார் பெண்களுக்குப் படித்துக்கொடுப்பதனால் அநேகமான அவகேடு வந்து சம்பவிக்குமென எண்ணுகின்றனர்.

மூன்றாவது வகையார் பெண்களுக்கு அவசியம் கல்வி கற்பிக்கவேண்டுமென எண்ணுகின்றனர். எனவே இம்மூன்று வகையாரின் பலவிதமான பேதங்களுண்டாயிருக்கிறது. இதில் முந்தின வகையாரின் திறமையின் குறைவு மற்ற இரண்டு வகையாரைக் காணக் கடினமான தவறாகவிருப்பதாகத் தெரிகிறது. இவர்கள் இப்படிச் சொல்வதின் காரணம் பெண்களுக்கு இவ்விதமாய் முயற்சித்துப் படித்துக்கொடுப்பதனால் அவர்கள் என்ன வேலைகள் செய்யப்போகிறார்கள் எனவெண்ணி ஆண் பெண் ஒவ்வொருவரும் இல்மை படிப்பது பரலு என்ற வேத விதியை குர்ஆன் ஷரீப் ஹதீது ஷரீப் இவைகளைக்கொண்டு படித்துக் கொடுப்பதின் மகத்துவத்தை விளங்கி அறியாதவர்களாக இருக்கின்றனர்.

. . .

எனவே ஒவ்வொரு ஆண் பெண்களும் படித்துக் கொள்வது பரல் என்றது காலக்ஷேபத்தின் கல்வியன்றி, தீனியத்தான (அக்கீதா) இருதய விளக்கம் நிர்ணயப்பிரமாணம், (இபாதத்) வணக்கம், (முஆமலாத்) லேவாதேவி, (முஆஷராத்) குடும்ப சம்ரட்சணை, (அக்லாக்) குணங்களை சீர்திருத்தல், முதல்போன்ற படிப்புகளாகவிருக்கிறது. இப்படிப்பட்ட பிரயோசனம் குர்ஆன் மஜீதில் சொல்லிய வண்ணம் ஆண்டவனிடத்தில் தாங்கள் நேரான வழியில் சீராக அமைந்து, ஆகிரத்தில் ஜெயமடைந்த கூட்டத்தினராகி நல்மாராயம் பெறுவார்கள். ஆகையால் இல்மை கற்றுக் கொள்வது ஒவ்வொரு ஆண் பெண்கள்பேரிலும் பரலென்பது குர்ஆன் ஹதீதுகளாலேயும் புத்தியைக்கொண்டும் நன்ருய் விளங்குகின்றதல்லவா.

(அக்கிதா) இருதய விளக்கம் நிர்ணயப்பிரமாணம், (இபாதத்) வணக்கம், முதல்போன்றவைகளின் சீர்திருத்தங்கள் யாவும் படிப்பைக்கொண்டு விளங்கவேண்டுமேயல்லாது வேறில்லை என்பது பிரத்திபட்சமானவை. இதைக் காண ஐம்புலன்களாலும் இல்மை படிப்பது அவசியமென்றுந் தெரிகிறது.

படிப்பில்லாத பெண்களின் நிலைமையை நாம் எல்லோரும் பார்க்கிறோம். அவர்கள் ஷிர்க்கு குபிரைப்பற்றி பிரித்தறிதல் அற்றவர்களாகவும், ஈமான் இஸ்லாத்தின் பேரில் பிரியமில்லாதவர்களாகவும், அல்லாஹுத்த ஆலாவின் விஷயத்தில் தங்களின் இஷ்டப்படி பிதற்றுகிறவர்களாகவும், ஸரகியத்தான மார்க்க சட்டதிட்டங்களுக்கு அவை சரியல்லவெனத் தங்களின் நாவுகளை நீட்டிப் பேசு

கிறவர்களாகவும், மக்கள் புருஷர் இவர்களை தனக்கு கைவச பட குறிகாரர்கள் மந்திரக்காரர்கள் எதைச் சொல்லுகின் ருர்களோ அதை செய்து காபிர்களாகிவிடுகின்ருர்கள். எனவே எந்த நிமிஷமும் (அக்கீதாக்கள்) இந்த நிலைமை யிலே இருக்குமாளுல் தொழுகை நோம்பு இவைகளைப் பற்றிச் சொல்லவே தேவையில்லை. சில பெண்கள் தொழுகை நோன்பை அவசியமான பரலென்று கருதுகின் ருர்கள். ஆனுல் தொழுகை நோன்பை அறவே விட்டுப் பெரும் பாவிகளாகிவிடுகின்றனர். சில பெண்கள் தொழுகை நோன்பை கண்ணியப்படுத்தாமலும் அதை அவசியமாய்ச் செய்யவேண்டுமென்றெண்ணுமலும் அதை மிடுமை என்றும் அதனுல் தீங்கு விளைகின்றதென்றும் நினைத்து சந்தேகங் களையற்ற காபிர்களாகிவிடுகின்றனர். எந்த சமயத்தும் ஒரு தம்பிடியளவு செலவில்லாத நோன்பும் தொழுகையும் இப்படியிருந்தால், (ஜக்காத்) செலவுள்ள ஏழைகளின் வரி ஹஜ்ஜைப்பற்றி விரித்துக் கேட்கவும்வேண்டுமோ! அக்கி தாக்கள் தீனின் வணக்கங்கள் இப்படிப்பட்ட நிலைமையி லிருந்தால், (முஆமலாத்) லேவாதேவியின் காரியத்தில் சுத்தப்படுத்திக்கொள்ள ஒரு தினையத்துணையளவேனும் இடமிருக்கப்படமாட்டாது. ஏனெனில், தொழுகை நோன்பின் கோலமோ தீனுகத்தோன்றும். (முஆமலாத்) லேவாதேவி பாமர ஜனங்களின் பார்வையில் முற்றும் துன் யாவின் கோலமாயிருப்பதால் இதை சுத்தம் பண்ணிக் கொள்வதின் முயற்சி சொந்தத்திலும் சொந்தமானவர்கள் இதை செய்கின்றவர்களாகவிருக்கிருர்கள். எனவே அறி யாத பெண்கள் எப்படி இதை சுத்தப்படுத்திக்கொள்வார்

கள். (முஆமலாத்) லேவாதேவியும் இப்படிப்பட்ட நிலைமை யாயிருந்தால், (முஆஷராத்) குடும்ப சம்ரட்சணையின் சீர் திருத்தம் எப்படி ஞாபகத்திற்கு வரப்போகிறது. ஏனெனில் (முஆமலாத்) லேவாதேவிபோ மற்ற அடியார்களுடைய கடமைகளாகவிருப்பதாய் எண்ணுகின்றார்கள். (முஆஷராத்) குடும்ப சம்ரட்சணை இதில் ஒன்றும் வெளியாகாததால் இதற்காக முயற்சி எடுப்பது மிகவும் குறைவாகவிருக்கிறது. லேவாதேவி குடும்ப சம்ரட்சணைகளை இப்படிப்பட்ட தாழ்ந்த நிலையில் மதியாதுவிட்டவர்கள் (தவாலீஹ்) தாழ்மை, (இக்லாஸ்) எந்த நேரமும் ஆண்டவனுக்காக வணக்கங்கள் கலப்பற்றுச்செய்வதும், அல்லா உடைய பயம் முகப்பத்து சபூர் ஷுக்கூர் முதற்போன்ற நற்குணங்களை எப்படி இவர்கள் கவனிக்கப்போகின்றனர். ஏனெனில் லேவாதேவி கொஞ்சமாகவும் அதிகமாகவும் குடும்ப பாரம் அதை காண மிகக் குறைவாகவும் மற்றவர்களுக்கு அதன் குணம் தெரிவதால் நல்லபேர் கெட்டபேர் அதன் மீது ஏற்படுகிறது. குணங்களின் பாகுபாடு தனக்குள் மிருதமாய் மற்றவர்களுக்கு தெரிதல் குறைந்த காரணத்தால் பாமர ஜனங்கள் முதல் மிகுந்த உலமாக்கள்வரை இதற்காக ஒரு தினையத்துணையளவும் முயற்சிப்பார்களில்லை. ஆகையால் தீனியத்தான சகல காரியங்களையும் விளங்காத காரணம் படிப்பில்லாத குறைவன்றோ; பிறவிக்குணத்திலே குறைந்த புத்தியை அடைந்த பெண்கள் அறவே படிப்பில்லாது போவார்களேயாகில் தீனியத்தான காரியங்களில் எப்படிப்பட்ட திறமைக்குறைவுகள் செய்வார்கள் என்பதை விரித்துச் சொல்லவும் வேண்டுமோ?

எனவே, குர்ஆன் ஹதீதுகளினாலும் புத்தியினாலும் ஐயறிவினாலும் தீனியத்தான படிப்பு வேதவிதியான பரலென்று தெரிந்திருந்தும் பெண்கள் காலக்ஷேபத்திற்கேற்ற தொழில் முறை அவர்களுக்கு அவசியம் இல்லாததினிமித்தம் அவர்களுக்குப் படித்துக்கொடுப்பதற்கு என்ன அவசியம் இருப்பது என்று சொல்லும் வார்த்தையானது முற்றும் தப்பிதமென்றே பிரத்தியக்ஷமாய் விளங்குகின்றதல்லவா?

வினா.

பெண்களுக்குக் கித்தாபு புஸ்தகங்கள் வைத்துப் படித்துக்கொடுக்கவேண்டுமென்ற அவசியமேயில்லை. அவர்கள் தங்களின்பேரிலுள்ள பரலான அகத்தியங்களை மாத்திரம் இல்முடையவர்களிடத்தில் தெரிந்து கேட்டுப் படித்தால் போதுமானது என்பதாம்.

விடை.

1-வது பரலானவைக்கு உதவியானவை பரலாகும். உபமானம் ஹஜ்ஜுச் செய்வதற்கு வாகனம் பரலாவது. 2-வது ஞாபகக்குறைவினால் கித்தாபுகளைப் படிப்பது அவசியமாயிருக்கிறது. 3-வது ஆண்களில் ஆலிமாகவிருப்பது தீனியத்தான அகத்தியங்களுக்கு பெண்கள் இரண்டு காரணங்களால் இயலாதவர்களாக இருக்கின்றார்கள். 1. கோஷா மார்க்கத்தில் அவசியமானதாகவிருக்கிறதினால் உலமாக்களிடம் செல்லமுடியாதவர்களாக விருக்கிறார்கள். 2. வீட்டின் ஆண்களால் தெரிந்துகொள்வார்களென்றால் சில பெண்களுக்கு அவ்வித ஆண்கள் கிடைப்பதேயில்லை. சிலவிடங்களில் தங்கள் தீனுக்கு பிரயாசை எடுத்து முயற்சிக்காதவர்கள் மற்றவர்களுக்காக என்ன

முயற்சிசெய்து சீர்திருத்தப்போகின்றனர். ஆகையால், இப்படிப்பட்ட பெண்களுக்கு தீனின் படிப்பு கஷ்டமா யிருக்கிறது. யாதொரு பெண் ஆலிமிடம் செல்லுவதற்கு அல்லது தன் வீட்டில் தகப்பனோ மகனோ அண்ணனோ தம்பியோ முதற்போன்றவர்கள் ஆலிமாகவிருப்பினும் சில மசலாக்களை இந்த ஆண்களிடம் கேட்கவும் ஏலாமலிருக் கிறது. ஏதேனும் புருஷனிடம் கூசாது கேட்கலாமென் றாலோ வழக்கத்தில் எல்லாப்புருஷர்களும் ஆலிமாகியிருப் பதுமில்லை. எனவே இவ்விதக் கஷ்டங்களை நிவர்த்தி செய்வதற்காக சில பெண்கள் ஆலிமாகி மற்ற பெண்களின் அகத்தியமானவைகளை அந்த ஆலிமான பெண்ணினிடம் கேட்டுத் தெரிந்துகொள்வது பரலென்ற கடமை. இப்படிப் பட்ட காரணங்களால் பெண்களுக்குப் படித்துக்கொடுப் பது அவசியமில்லை என்பதின் தாவாவாகிறது முற்றும் தப்பிதமென்று பிரத்தியட்சமாய் விளங்குகிறதன்றோ ?

2வது வகையாரின் அபிப்பிராயமானது பெண்களுக் குப் படித்துக்கொடுப்பதால் அநேகமான கெடுதிகள் அவர் களால் உண்டாகின்றன. அதாவது, எழுதப்படிக்கத் தெரிந்த நிமித்தம் அவர்கள் சுய உரிமை பெற்றவர்களாயும் அச்சமற்றவர்களாகவும் நாணமென்பதேபற்றவர்களாகவும் குபாடக்காரர்களாகவும் பார்க்கிறோம். அல்லாமல் இவர்க ளில் எழுதத் தெரிந்தவர்களோ அதிகமான மடத்தன முடையவர்களாகவிருக்கின்றனர். அதாவது, தனக்கு இஷ்டம் எந்த இடத்திலிருக்குமோ அந்த இடத்திற்கு கடிதம் எழுத ஆரம்பித்துத் தூதுகளும் சலாமும் அதின் மூலமாய் தெரிவித்து விடுகின்றனர். இதேவிதமாய் மற்ற

வர்களும் தங்களின் நப்சானியத்தான இச்சைகளைக் கடித மூலமாய் இவர்களுக்குத் தெரிவிக்கவுஞ் செய்கின்றனர். அதுசமயம் இப்பெண்களின் கல்பில் பதிந்து மிருதுவான பதில் எழுதி இவர்களுக்கிடையில் சம்பாஷணைகள் நீடித்து இவர்கள் வழிபார்த்த கெட்டவேலைக்கு ஆரம்பமாகி விடுகிறது. அப்படி அப்பெண்கள் பதில்கொடாத காலத்து இந்த (நசல்) காமப்பித்தம்கொண்ட ஆண்கள் அப்பெண்கள் தங்களின் எண்ணத்திற்குப்பாதியளவு ஒப்புக்கொண்டுவிட்டனர் என நம்பி கடிதத்தின்மூலமாய் மற்ற பாதிக் குறைவும் வரைந்து பூர்த்தி செய்து அனுப்புகின்றனர். பெண்களின் வழக்கமான அப்பியாசம் மனமிரக்கமுடையதாயிருப்பதனால் ஷைத்தானின் வலையில் இப்பெண்கள் மாட்டிக்கொள்வது ஓர் ஆச்சரியமல்ல. இப்படிப்பட்ட பெண்கள் தங்களுக்குச் சம்மதமில்லையென அப்படிப்பட்ட ஆண்களுக்குத் தெரியப்படுத்தலாமென்றாலோ தன் புருஷன் குடும்பத்தினர்கள் தங்களின்பேரில் கெட்ட எண்ணங் கொண்டுவிட்டால் பின் எவ்வாறு காரியங்கள் முடியுமோவென்ற அச்சத்தினால் அப்படிப்பட்ட ஆண்களுக்குப்பதில் எழுதமுடியாமல் மறைவு செய்கின்றார்கள். இதனால் இப்பெண்களுக்கெழுதும் ஆண்கள் எவ்விதத் தீங்கும் அச்சமும் அற்றவர்களாய் தைரியத்தோடு மிகுந்த உற்சாகமாய் எழுத ஆரம்பிக்கிறார்கள். ஆகையால் இவ்வித ஆபத்துகள் நேரிடுங் காரணம் பெண்களுக்குப் படித்துக்கொடுப்பதினாலேயுண்டாகிறது. அப்படிப் படித்துக்கொடுக்காத காலத்தில் பெண்களுக்கு ஆண்கள் கடிதம் எழுதினால் அன்னியர்களுக்கு மர்மம் தெரிந்துவிடுமென்ற அச்சத்தால் கடிதம்

எழுதாமல் மேல்கண்ட சகல ஆபத்துக்களையும் விட்டுக் காக்கப்படுகிறார்கள். இதைக்காண மற்றொரு பெரிய ஆபத் தாகிறது, இக்காலத்திய எழுதப்படிக்கத்தெரிந்த பெண்கள் எழுதும் வியாசங்களை பேப்பர்களில்பிரசுரிப்பதால், வாசகங் களை விளக்கும் சைத்தானியத்தான எண்ணம் புனைந்த ஆண்கள் எழுதின பெண்களுடைய நோக்கத்தையறிந்து கெட்ட நெருப்புச்சுவாலையான காம இச்சையை வெளிக் கிளப்புகிறார்கள். இதைக்காண மற்றொரு பெரிய ஆபத் தாகிறது, (செய்யுள்)பாடல்களை பெருமைக்காகத் தங்களின் பூரா விலாசத்தையும் பாடிப் பிரசுரஞ்செய்வதால் சகல கெடுதிகளும் விளைகின்றன. அல்லாமல் எழுதப்படிக்கத் தெரிந்த ஆண்பெண்களின் இரகசியம் எந்தவிதத்திலே னும் புருஷன் குடும்பத்தார்களுக்குத் தெரியுங்காலத்தில் தங்களின் பேச்சின் சாமர்த்தியத்தால் யாதொரு கெட்ட வார்த்தைகளும் தங்கள்பேரில் சாராதபடி முகத்தையும் மூக்கையும் சுழித்தும் பாசாங்குசெய்து கபடத்தனமாய் அழ ஆரம்பிக்கிறார்கள். சில சமயத்து தற்கொலை புரிந்து கொள்வதாயும் ஆறு கிணறு குளங்களில் வீழ்வதாகவும் பயமுறுத்துவதால் அப்பெண்களின் சவரட்சணைக்காரர்கள் பயந்து அப்பெண்களுக்கு நல்லவார்த்தைசொல்லி உபசரிக்க வேண்டியதாயிருப்பதால் வாய் மூடிக்கொள்கின்றார்கள். மேனும், பெண்களில் மற்றொருவகைக் கெடுதியானது இவர் களுக்குப் படிக்கவும் எழுதவும் தெரிந்திருப்பதனால் பல வகை நூல்களையும் காமயிச்சையை வெளிக்கிளப்பும் நாவல் களையும் படிக்கிறார்கள். சில சமயத்து இப்படிப்பட்ட பாடல்களை சற்று பலமாகவே படிப்பதனால் அடுத்த வீடு வீதிகளில் சத்தங்கேட்டு ஒருவன் மயங்கி அவளைப் பின்

பற்றவும் ஆரம்பிக்கிறான். அப்படிப் பின்பற்றி அவன் கோரிய காரியம் சித்தியாகாவிட்டாலும் அவன் வெட்கத்தைக்கெடுத்து மயங்கவைத்ததற்கு இவள்தான் காரணமாகிறாள். பெண்களுக்குப் படித்துக்கொடுக்கக்கூடாதென்றவர்களின் சுருக்கமான கருத்து இதுவே.

இதை நான் பொய்யாக்காவிட்டாலும் இவர்களின் திறமைக் குறைவான பார்வை வைத்திருக்கிறார்களென்று அவசியமாகச் சொல்ல அஞ்சேன்.

ஏனெனில் இவர்கள் உண்மைகளையுற்றுநோக்குபவர்களாக இல்லை இதன் அசல் உண்மையாகிறது. எல்லாக் கெடுதிகளுக்கும சிலகாரணங்களிருக்கிறது. ஹலால் ஹராம் தவாபு, அதாபு குணங்களின் சீர்திருத்தங்கள், அல்லாவுடைய பயபக்தி ஞானம், அல்லாவுடைய வலுப்பம் முதற்போன்ற தீனியத்தான கித்தாபுகளைப் படித்துக்கொடுக்காமல் எழுத்துகளைமட்டும் கற்றுக்கொடுத்து பெண்களின் அபிப்பிராயப்படி பல புஸ்தகங்களைப்பார்த்து எழுதப் படிக்கவும் தேற்சியாகிப் புதியன புகுதலும் பழயன கழிதலும் என்ற பட்டத்தைப்பெற்றுக் கேட்போர் உடையோராகிறார்கள். ஆகையால் எழுத்தைமாத்திரம் கற்றுக்கொள்வதால் நன்நடபடிக்கை அமல்களைச் சீர்திருத்தமடைந்த கல்விமானுகார்கள்.

2வது பிரயோஜனப்படக்கூடிய தீனுக்குரிய போதுமான கித்தாபுகளைப் படித்துக்கொடுப்பதுடன் அப்படிப் பட்ட கிதாபின் வாசகங்களை மனதில் பதியச்செய்வதற்கு முயற்சியும் அமலின்பேரில் சிரத்தையும் செய்வதால், உதாரணமாக எந்தப் பெண் புறம்பேசுவது பாவமென்று

தெரிந்திருப்பாளோ அதற்கு பின்புறம் பேசினல் உடனே படித்த படிப்புக்கு மாறுதல் செய்ததாய் ஞாபகப்படும்படி மனதிற்கு எச்சரிக்கை செய்யவேண்டும்.

கோஷாவிலும் மிருதுவாகப் பேசவேண்டுமென்ற கண்டிப்பையும் படித்திருக்க அதிலும் திறமையின் குறைவோ மறதியோ காணப்பட்டால் உடனே விலக்க வேண்டும். மேலும், அவளுக்கு முதலின் பேராசை நகையுடைய பழிப்பு இவைகளைப் படித்துக்கொடுத்திருந் தும் அவள் யாதொரு உயர்ந்த புடவை, அகத்தியமில்லாத நகையின்பேரில் ஆசைப்பட்டால் உடனே அதைப்பற்றி அவளுக்கு எச்சரிக்கைப்படுத்துங்காலத்தில் மேலான குணங்களும் ஒழுக்கமான அமல்களின் அப்பியாசமு முண்டாகும். மேலும், பெண்களுக்குப் படித்துக்கொடுக் கும் பந்தோபஸ்தின் விபரங்களை ஆண்களுக்குத் தெரியும் படி செய்யவேண்டியது.

கவனிப்பு.

இப்படிப்பட்ட எல்லாக்கெடுதிக்கும் காரணங்கள் பெண்களுக்குமட்டும் என்ன சொந்தம் இந்த கெடுதிகள் ஆண்களுக்கு ஏற்படுமேயானல் அவர்களுக்கு இது கெட்டவைகளாகவிருக்க பெண்களுக்குப் படித்துக்கொடுப் பது கூடாதென்றும், ஆண்களுக்குச் சகல உரிமையுடன் படித்துக்கொடுக்க முயற்சிப்பதின்காரணம் என்னே என சற்று சிந்திக்கும் சமயத்து பெண்களின் கெடுதி வெளி யாகுதல், அல்லது கெடுதிகளை அவர்கள் புறம் சேர்ப்பது வழக்கத்தில் பழிப்பாகவிருக்கிறது. இதே கெடுதிகள் ஆண்களிடத்தில் வெளியானலும் அல்லது அவர்கள் புறம்

சேர்த்தாலும் அது பழிப்பில்லாததால் பெண்களை விலக்குகிறவர்களாயும் ஆண்களை விலக்காதவர்களாயுமிருக்கின்றார்கள். பின் சாது மார்க்கத்தில் பார்த்தால் எதைப் பெண்களுக்குப் பழிக்கப்பட்டிருக்கிறதோ அதைப் போல் ஆண்களுக்குமிருக்கிறது. மேலும், ஆண்களுக்கு தௌபாவைக்கொண்டு பாவமற்றுத் துப்புரவாளியாவதேபோல் பெண்களுக்குமிருக்கிறது. எனவே ஆண் பெண்களின் பாவமும் தௌபாவும் ஒன்றாகவே இருக்க பெண்களுக்காகக்கூடாதவை ஆண்களுக்காகுமென்பதை கவனிக்குங்காலத்து வழக்கத்தை சாதுமார்க்கத்திற்கு மேலாய்க்கருதுவதாக நன்றாய் விளங்குகிறது. இதுவானது நபிகள் நாயகமவர்கள் தோன்றுவதற்குமுன்னிருந்த அந்தகார அஞ்ஞான அகக்குருடர்களின் வழக்கமாகவிருக்கிறது. இதை நான்மாத்திரம் கூறுவதில்லை. அநேக மனிதர்களின் நாவினால் கேள்விப்படுகிறோம். அதாவது, ஆண்களுக்குவமை பளிங்கியில் பத்துதரம் அழுக்குப்பட்டபோதிலும், ஒருதரம் கழுவினால் சுத்தமாகி விடுகிறது பெண்களுக்குவமை முத்தில் உண்டான தண்ணீரைப்போல் ஒருதரம் அந்த தண்ணீர் இறங்குமேயானால் மறுமுறை அம்முத்தில் தண்ணீர் செல்லுவதில்லை. இதன் கருத்தாவது ஆண்களுக்காக பாவத்தை லேசாகவும் பெண்களுக்குப் பாவம் மிக கடுமையென்பதைப்பார்த்தால் பெருமையுடன் பாவத்தை லேசாக மதித்தகுபிரைபயப் படவேண்டியதாகவிருக்கிறது.

3-வது வகையார் படித்துக்கொடுப்பதற்கு உதவி புரிகின்றவர்களாகவிருந்தபோதிலும் படித்துக்கொடுக்கும்

புஸ்தகங்களிலும் விகற்பம் செய்கின்றார்கள். இதில் சிலவற்றை மேற்கூறிய இரண்டாவது பாராவில் எழுத்தை மாத்திரம் கற்றுக்கொடுத்தல் பலவிதமான புஸ்தகங்களைத் தங்களின் இஷ்டம்போல் வாசித்தல் அமலின் அளவு சிரத்தைகொள்ளாத பலவகை உபமானங்களுடன் கூறப்பட்டிருக்கிறது. மேலும், சில விஷயங்களை இங்கு விவரிப்போம். அதாவது, சில பெண்களுக்கு தீனியத்தான இல்மை படித்துக்கொடுப்பதற்கு பதிலாகத் தேச சரித்திரத்தையும் பூகோளத்தையும், மேலும், முன்னேற்றமாய் இங்கிலீஷையும், மேலும் அதிலும் முன்னேற்றமாய் கிறிஸ்தவர்களின் பைபில்களையும் படித்துக்கொடுக்கிறார்கள். இவைகளின் காரணமானது இங்கிலீஷ்காரர்களைப் பின்பற்றி ஐரோப்பியரின் கல்வி கற்றுக்கொடுப்பவர்களே ஒழுங்கென்று எண்ணுகின்றார்கள். நம் இஸ்லாமிய வர்க்கத்தினர்களிலும் ஐரோப்பியர்களின் பழக்கவழக்கங்களின் அப்பியாசத்துக் குணங்களின் பாகுபாட்டு வித்தியாசத்தைத் தினையத்துணையளவேனும் கவனிப்பதுமில்லை. நமது மார்க்கமோ இஸ்லாம். அதைத்தான் நாம் பற்றிப்பிடிப்பவர்களாகவிருக்கிறோம். அவர்களிலோ அநேகம்பேர் மார்க்கமில்லாதவர்களாகவும், அப்படிச் சிலர்களுக்குண்டுயென்றாலும் அவர்களுடைய மார்க்கத்திற்கும் நம்முடைய மார்க்கத்திற்கும் முற்றும் நேர் விரோதங்களிருக்கிறது. மேலும், அவர்களுக்கு மார்க்கப்படிப்பு என்பதே அறவே இல்லாமல் வாயினால்மாத்திரம் கற்றுக்கொடுப்பதுவோ அல்லது துன்யாவுடைய கல்வியைக் கற்றுக்கொடுக்கவோ அல்லது தங்களின் மார்க்கப்படிப்பைக்கற்றுக்கொடுக்கவோ செய்வார்கள். ஆகையால் இவர்கள் கற்றுக்கொடுப்பதின் கருத்து

வேருகவும் இருக்கிறது. எனவே, நம் தீனுல் இஸ்லாத்தின் கல்வி கற்றுக்கொடுப்பதின் கருத்தைப்பற்றி ஒன்ருவது பாராவில் சீர்திருத்த விஷயமாய்ச் சொல்லியிருக்கிமோம். அதாவது (அக்கிதா) இருதய விளக்கம் நிர்ணயப்பிரயாணம் (இபாதத்) வணக்கம் (முஆஷராத்) குடும்ப சம்ரட்சணை (முஆமாலத்) லேவாதேவி (அக்லாக்) நற்குணங்களின் சீர்திருத்தங்களாகவிருக்கிறது. நம் கருத்து தீனுடைய இல்மாகவிருக்கிறதென பகிரங்கமாய் விளங்கியிருக்க ஐரோப்பியர் படித்துக்கொடுக்கிற விதத்தை நாம் தெரிந்துகொள்வது எந்தவிதத்திலும் சம்பந்தமில்லாததாய் விளங்குகிறது.

கவனிப்பு.

யாதொருவருக்குக் காலக்ஷேபத்தின் சம்பாதிப்புத் தேவையென்றிருக்குமாளுல் தீனியத்தான இல்முகளுக்குப் பின்னுல் அந்தக்காலத்தின் அவசியமான படிப்புகளைப் படித்துக்கொள்வதினுல் யாதொரு குற்றமுமில்லை. ஆனுல், கிறிஸ்தவர்களின் பைபில் எவ்வகை மனிதர்களுக்கும் அவசியமில்லாதவை என்பது யாவருக்கும் தெரிந்த விஷயம்.

மேலும், பெண்களுக்குச் சில காரணங்களால் அக்கல்வி தேவையற்றதாகவிருக்கிறது. அதாவது, இவர்களின் அன்னவஸ்திரம் ஆண்களின் பொறுப்பாயிருப்பதிளுலும், மேலும் கோஷா முறையினுலும், மேலும் காலக்ஷேபத்தினுடைய கல்வி கற்க கோஷா முறையிலிருந்துகொண்டு கற்றுக்கொள்ள முடியாத காரணங்களினுலும் வீணுய் காலத்தை பணுதாக்கி வைப்பதுடன் பலவிதக் கெடுதிகள் ஏற்படுமென்பதைக் கீழ் சொல்லுவதால் அதைக் கவனிக்கவும்.

எந்தவேளையில் ஒரு பெண்ணுக்கு ஒரு சவரட்சணைக் காரர்கள் இல்லாத சமயத்து, தனது கற்புக்கு யாதொரு பங்கம் வராது சம்பாதனை செய்யும்படியான துன்யாவின் படிப்புகள் அகத்தியமான அளவிற்கு எழுதுவதையும் கணக்கையும் கைத்தொழிலையும் கற்றுக்கொள்வது அழகாக விருக்கும்.

எனவே, துன்யாவுடைய படிப்பில் தேற்சிபெற்று சீர்திருத்தத்தைக் கருதுகின்றவர்கள் தீனுடைய இல்மைப் போல் அந்த இல்மு அமல்களால் கற்றுக்கொடுக்கும் சீர் திருத்தங்களை உலகமெங்கும் சோதித்துப்பார்த்தாலும் நம் தீனுல் இஸ்லாத்தில் கற்றுக்கொடுக்கும் சீர்திருத் தங்களுக்குச் சமமாய் இராதென்பது நன்றாய்த் தெரியும்.

உபமானமாக தீனுடைய படிப்பினால் பூர்த்தியாய் குணப்பட்ட ஓர் மனிதனையும் துன்யாவின் படிப்பில் குணப்பட்ட ஓர் மனிதனையும் சீர்தூக்கிப்பார்க்கும்சமயத்து இவ்விருவர்களின் நற்குணங்களையும் குடும்ப சம்ரட்சணை லேவாதேவி முதல்போன்றவைகளில் வானம் பூமியினுடைய வித்தியாசத்தைக் காணலாம். ஆனால், நம் தீனுல் இஸ்லாத்தைப்போல் பாவனை செய்வோனை சீர்திருத்தக்கார னென்று பேர்வைக்கும்காலத்து ஒருநன்றறியும்படியான வாசகத்தில் தவறிவிட்டானென்றே நாம் சொல்வோம்.

மேலும், ஓர் புத்திமானிடத்தில் மற்றோர் தீன்தாரான மனிதன் உண்மையான சீர்திருத்தக்குறைவு காணப்பட் டால் அதன் காரணம் தீனியத்தான இல்முகளின் பூர்த்தி யான குணத்தின் பாகுபாட்டை எடுத்துக்கொள்ளப்படாத தாகவிருக்கும். அதாவது, தீனின்வகைகளான அக்கீ

தாக்கள் இபாதத்துகள் லேலாதேவி குடும்பசம்ரக்ஷணைகள் குணவான்களாயிருக்கும் கிலர் தொழுகை நோன்பின் சட்ட திட்டங்களை மாத்திரம் அறிந்து அதற்கு கட்டுப்பட்டு நடப்பவர்களை தீன்தாரெனப் பட்டமளித்து சீர்திருத்தக் குறைவுள்ளவரென்று பேசுகின்றார்கள். உண்மையில் தீன் தாரன் யாரென்றால் தீனுடைய எல்லா வகைகளிலும் அதன் அகத்தியங்களை தெரிந்து கட்டுப்பட்டு நடக்கக் கூடியவன் எவனோ அவனாகவிருக்கும். நம்முடைய தாவா வானது தீனுடைய சகல வகைகளிலும் புகுந்து குணத்தின் பாகுபாடுகளை ஏற்றுக்கொள்ளுகிறவனைப்பற்றியே பேசு கிறதால் மேல்கண்ட சந்தேகங்கள் நீக்கப்பட்டுவிட்டது. இப் படிப்பட்ட சந்தர்ப்பங்களை நீக்குவதற்கு அசல் கித்தாபுகளி லிருந்து விளங்கிக்கொள்ளவும். எனவே, தீனுடையஇல்மின் சீர்திருத்தத்திற்கு எந்த இல்மையும் நிகராகச் சொல்லவே முடியாது. இதே தீனின் இல்மின் குணத்தின் பாகுபாட் டினால் முன்னோர்களின் மேலான குணத்தின் ஒழுக்கங் களைப்பற்றி ஐரோப்பியர்களான இங்கிலீஷ்காரர்கள் ஒப் புக்கொண்டிருப்பது கவனிக்கத்தக்கவையாகும். இக் காலத்திய நாம் நமது வீட்டின் செல்வாக்கையறியாமல் மற்ற ஜாதியாரிடத்தில் பிச்சைவாங்குவோராகயிருக்கிறோம். மௌலானா ரூமி மதனவியால் கூறியபடி ஒரு கூடையில் சோற்றைச் சிரசின்மீது வைத்துப் பிச்சை பிச்சையெனத் தெருத்தெருவாய் அலைவோரையும் முழங்காலினளவு ஜலத்தில் நின்றுகொண்டு தண்ணீர் தண்ணீர் என்று பரி தவிப்பவரைப்போலாகவிருக்கிறோம். சில மனிதர்கள் தங் களின் பெண் குழந்தைகளைப் பயமற்ற சுயேச்சையடைந்த

பெண்களிடம் படிப்புக்காக அனுப்பிவைக்கின்றனர். அது போகப் பழக்கத்தினுல் தெரிகிறதாவது.

கெட்டவர்களின் சிநேகப்பான்மையால் அக்கெடுதியின் குணம் மனிதனில் அவசியமாய் உண்டாகிவிடுகிறது. அந்த சிநேகிதர் தனக்கு மேம்பட்டவராகவிருப்பாராளுல் இதைக் காண அதிகமான கெடுதியும் விளையுமாதலால் அக்குழந்தைகளுக்கு (ஒஸ்தாதை) உபாத்தியாயரைக் காணச்சொந்தமான மேம்பட்டவர் யாராகவிருக்கும். எனவே, அப்படிப்பட்ட நாணமில்லாக்குணம் இச்சிறு குழந்தைகளுக்குமுண்டாகுமென அபிப்பிராயத்துக்குட்பட்டவரை பெண்களுக்கு நாணமுண்டாகியிருப்பது சகல நன்மைகளுக்கும் திரவுகோலாகக் காணப்படுகிறது. எச்சமயத்து அப்பெண்ணுக்கு நாணம் போய்விடுமோ அச்சமயத்தில் எப்படிப்பட்ட நன்மையின்பேரிலும் ஆதரவென்பதேபற்று அதனுல் தீங்கு விளையுமென்பது புத்திக்கு ஒப்பாத விஷயமே அல்ல. உனது நாணம் இழக்குங்காலத்து நீ நாடியதைச் செய்துகொள் என்ற அரபியின் முதியோர் வாக்கியப்படி என்னபிப்பிராயத்தில் ஆண்களைக்காண பெண்களுக்கு இதனுல் அதிகக் கெடுதல்கள் உண்டாகிறது. ஏனெனில், ஆண்களோ புத்தியின் திறமையால் கெடுதியைக்கண்டு விலகிக்கொள்ள முடிகின்றது.

பெண்களோ புத்தியின் குறைவினுல் அவ்விதம் விலக்க முடியாது. மேலும், இவ்விதமாகவே (ஒஸ்தாது) உபாத்தினிக்குமேல் கண்ட குணங்கள் இல்லாதிருந்தபோதிலும் தன் வகுப்பின் பாடத்துப் பிள்ளைகள் மேலும் மதராஸாப் பிள்ளைகளிலும் மேல்கண்ட கெட்ட வழக்கங்களிருந்தாலும்

இந்தவிதக் கெடுதிகளையும் உண்டாக்கும். ஆகவே இதனால் இக்காலத்திய இரண்டுவிதக் கெடுதிகளையும் அறிந்து கொள்ளப்பட்டது.

1-வது படித்துக்கொடுக்கும் பெண் இஸ்லாமானவர்களாக மதரஸாவுக்கு வருகிறது. வண்டி போலியாகவே இருக்கட்டும். மேலும் அங்குவந்து பருதாவிலேயே இருந்து கொள்ளட்டும். ஆனால், மற்ற மாணவப்பெண்கள் பல ஜாதியாயும், பல கூட்டத்தினர்களாயும், பல எண்ணங்களையுடையவர்கள் பிரதி தினமும் அங்கு சேகரமாகுவதால், இவர்களின் கெட்ட குணங்களின் பாகுபாடு சிநேகிதத்தால் ஏற்பட்டு தங்களின் கற்பை இழப்பதுடன், பெண் (ஓஸ்தாது) உபாத்தினியானவள் நாணமற்ற மோசக்காரியாகுங்காலத்து, வேப்பெண்ணெயுடன் கரிப்பவளம் சேர்ந்த பாவனைபோலாகுவதைப் பல சம்பவங்களால் சோதிக்கப் பட்டதாயும் காணப்பட்டதாயுமிருக்கிறது.

2 வது படித்துக்கொடுப்பதையோ அல்லது தொழிலைக்கற்றுக்கொடுப்பதையோ மேற்பார்வை செய்வதின் தந்திரமாய் கிறிஸ்தவ மிஷனெரிப் பெண்கள் பிரதிதினமாவது வாரத்திலாவது வந்து கலந்துகொள்ளுங்காலத்து அப்பெண்ணின் அபிமானமும் ஈமானும் பறிமுதலாய் போகிறது நூற்றுக்கணக்கான கைசேதம். இதிலும் பெரிய கைசேதம் இப்படிப்பட்ட கிறிஸ்தவ மிஷனெரிப்பெண்களை வீட்டுக்கு அழைப்பது பெரிய கௌரதை எனச் சிலர் எண்ணி அப்படியே அழைக்கவும் செய்கின்றனர். என்னபிப் பிராயத்தில் இப்படிப்பட்ட ஆபத்துகளைவிட்டும் தப்பித்துக் கொள்பவர்களே தப்பித்துக்கொள்வார்கள். அவர்களைப்

பின்பற்றி நடப்போரின் நிலைமை எப்படியுரைப்பேன். ஒரு வயதுசென்ற இஸ்லாமின் பாசிக்கான கிழவியை பின்பற்றி வயதில் ஒருமுறை பேசினாலும் பகிரங்கமான கெடுதிகள் விளைவதாகவிருக்கிறது. எனவே இந்தப் பாராவையும் இரண்டாவது பாராவில் கண்ட விஷயங்களையும் கவனிக்குங்காலத்து சகலவிதமான ஆபத்துகளையும் விட்டுத் தப்பிப்பதின் வழியை தேடவேண்டியது அவசிய மாகவிருக்கிறது. ஆகையால் சகலவித ஆபத்துகளையும் விட்டு மீட்சிபெறும் வழியாகிறது. நீண்டகாலமாய் நடந்துவருகிற இரண்டு இரண்டாய் நாலு நாலாய் பெண் பிள்ளைகள் கற்றறிந்த தங்களின் சுற்றத்தாரிடம்போய் கற்றுக்கொள்வதாகவிருக்கும். மேலும் கூடுமானவரை சம்பளத்தைப் பொருட்படுத்தாத பெண் (ஒஸ்தாது) உபாத்தினி கிடைக்குங்காலத்து அநுபோகத்தால் தெரிந்த விஷயமானது, அவள் படித்துக்கொடுப்பதால் அதிக பாக்கத்துள்ள குணத்தின் பாகுபாடு தரக்கூடியவையாகவிருக்கிறது. இப்படிப்பட்ட பெண் (ஒஸ்தாது) உபாத்தினி காலக்ஷேபத்தின் அவசியத்தையுத்தேசித்து சம்பளம் பெற்றுக்கொண்டபோதிலும் குற்றமில்லை. மேலும், எந்த இடத்திலும் இப்படிப்பட்ட பெண் (ஒஸ்தாது) உபாத்தினிகள் கிடைக்காதுபோனால் தங்கள் தங்கள் வீட்டிலுள்ள ஆண்கள் படித்துக்கொடுக்கவும். அப்படி கற்றுக்கொடுக்கும் விதமாவது, முதல் முதல் குர்ஆன் மஜீதை இயன்றமட்டும் பிசகில்லாது கற்றுக்கொடுத்தபின் தீனியத்தான கித்தாபுகளில் மிருதுவான பாஷைகளில் கித்தாபுகளைக்கொண்டு தீனுடைய வகைகள் பூறுவும் கற்றுக்கொடுக்கவும். மேலும்வெட்கப்படும்படியானமஸலாக்

களை தன் பெண்சாதிமார்களுக்குச் சொல்லிவிளங்கவைத்து பின் அவர்களின்மூலமாய் இவர்களுக்குப் படித்துக் கொடுக்கும்படி செய்யவேண்டும். இது முடியாத காலத்தில் அந்த தானங்களை ஞாபகம் வைப்பதற்காக அடையாளமிட்டுவைத்தால், அப்பெண் பெரியவளானகாலத்து தானே விளங்கிக்கொள்வாள். அல்லது ஆலிமான புருஷன் கிடைத்தால் அவரிடம் கேட்டுப் படித்துக்கொள்வாள். அல்லது புருஷன் மூலியமாய் ஒரு ஆலிமிடம் கேட்டுத் தெரிந்துகொள்வாள். மேலும், படிப்பதற்கும் வாசிப்பதற்கும் தீனுக்குப் பிரயோஜனத்தைக்கொடுக்கும் கித்தாபுகள் வேண்டுமென்பதை ஆலிமிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டியது. மேலும், எல்லாக் கித்தாபுகளைப் படிக்காவிட்டாலும் அகத்தியமான கித்தாபுகளைக் கற்றுக்கொடுப்பதுடன் அமலையும் மேல்பார்த்து பாக்கிக் கித்தாபுகளை எப்போதும் வாசித்துவரும்படி செய்யவும். மேலும், அப்பெண்ணுக்கு மற்றவர்களுக்கும் படித்துக்கொடுப்பதின் ஆசையிருக்குமானால் புதிதுபுதிதாய் இல்மு அமல் அளவில் அபிவிருத்தி ஏற்படுகிறதால் வயது பூராவும் படித்துக் கொடுப்பதில் அமைத்துவைப்பது மேலாகவிருக்கிறது. மேலும், தீனியத்தான கித்தாபுகளை ஆராய்ச்சிபண்ணுவதில் மறதி ஏற்படாமலிருக்கும்படி எச்சரித்து அபிவிருத்தி புகட்டிவரவேண்டும். மேலும், அகத்தியமானபடிப்பின் அளவிற்குப் பின் அப்பெண்ணின் நிலைமை அறிந்து அரபு கற்பதளவில் திருப்பவேண்டும். ஏனெனில், குர்ஆன்ஷரீபு ஹதீதுஷரீபு அசல் பாஷை அரபாகவிருப்பதால் குர்ஆனுடைய மொழிபெயர்ப்பின் அசலைமாத்திரம் படிப்பதில் அதிக

தவறுதல் உண்டாகுமென்று அபிப்பிராயங்கொள்ளுகிறேன். எனவே இவைகளடங்கலும் பெண்களுக்குக் கல்வி கற்பிக்கும் விதங்களாயிருக்கிறது. மேலும், பெண்களுக்கு வீட்டுக் குடும்பங்களின் அவசியத்திற்காக எழுதக் கற்றுக்கொடுக்கவேண்டுமென்றால் அப்பெண்ணின் குணம் எழுதுவதால் வேறுபட்டு நாணம் அச்சம் அற்றுப்போகாதென்ற அபிப்பிராயம் தோன்றிய காலத்து அதனால் யாதொரு குற்றமுமில்லை. அப்படிப்பட்ட நாணம் அச்சம் அற்றுவிடுமென்ற பயந்தோன்றியகாலத்து (வாஜிபு) கடமையில்லாத பிரயோஜனங்களைச் சம்பாதிப்பதைக்காண அக்கெடுதிகளைவிட்டு நீங்கிக்கொள்வது அகத்தியமான காரியமாகவிருக்கிறது.

## இங்கிலீஷ் படிப்பதின் பத்வா.

இங்கிலீஷ் படிப்பது ஆகும் ஆகாதென்ற விஷயத்தில் பல அபிப்பிராய பேதங்கள் இக்காலத்திலிருப்பினும் அநேக பேர்களுடைய அத்தாட்சிகள் போதுமானவரை இல்லாததினால் அது முடிவடையாமல் நாளுக்குநாள் அபிப்பிராய பேதங்கள் அதிகப்பட்டு உண்மை வெளியாகாதிருக்கிறது.

என் அபிப்பிராயத்தில் பட்ட பைசலை எடுத்துரைக்குங்காலத்து நீதவானின் இருதயத்தில் நியாயமென்று தெரிந்துகொள்வானென்றே நம்புகிறேன். பிடிவாதக்காரனுக்கு எப்படிப்பட்ட உபதேசங்களும் தக்க ஆதாரத்தோடு எழுதப்பட்டவைகளும் ஆதாரவற்றதாகவே அவனுக்குத் தோற்றப்படும். இங்கு சில (இசுவு) வரையறுப்பை சொல்லி இதற்கு முடிவு செய்யப்பட்டிருப்பது (அவ்விசுவு) ஆலீம்கள் விளங்கப்பட்டவைகளானதினால் எழுதாமல் பைசலை

மாத்திரம் அவசியமான இடத்தில் உதாரணங் காட்டி எழுத ஆரம்பிக்கிறேன்.

1. எவ்வாறு வியாபாரங்கள் ஆகுமென்றிருந்து ஜும்ஆவின் (பாங்கு) வணக்கத்தைச் செய்யும்படி அழைக்கப்பட்ட சப்தம் கேட்டமாத்திரம் அவைகள் கூடாமலாகி விடுகின்றதோ, அதைப்போல் கல்விகளை எந்தப் பாஷையிலேனும் கற்றுக்கொள்வது கூடுமென்றிருப்பினும் அது கேட்டை விளைவிக்குமென்ற காலத்து அப்படிப்பு கூடாமலாகிவிடுகிறது

2. எவ்வாறு துப்பாக்கி ஆயுதம் முதல்போன்றவைகளை விற்பனை செய்வது ஆகுமென்றிருப்பினும் வழிப்பறிக் கொள்ளைக்காரர்களுக்கு விற்பனை செய்யமுடியாமலிருப்பதேபோல் இங்கிலீஷ் படிப்பது கூடுமென்றிருப்பினும் இதனால் படுபோக்குண்டானால் விலக்கப்பட்டதாகவிருக்கிறது.

3. தீன் என்பது (தொழுகை) வணக்கம் (நோன்பு) உபவாசம் (ஜக்காத்) ஏழைவரி முதல்போன்ற சில வெளித்தோற்றம் (அமல்) கிரியைகளை மட்டும் சொல்லாமல் எல்லாத்தைக் காணப் பெரிய (அக்கீதா) இருதயவிளக்கம் நிர்ணயப்பிரமாணம் சந்தேகமற அறிந்துகொள்ளாதவரை மீட்சி பெறுவதற்கு இடமில்லையோ அப்படிப்போல் நற்குணங்களுமிருக்க சில வெளிப்பார்வையான (அமல்) கிரியைகளை அனுஷ்டித்து (அக்கீதா) நற்குணங்களை சீர்திருத்தாதுபோனால் ஒருபோதும் பூரா இஸ்லாமியரென்று சொல்லவேமாட்டோம். இப்போது இங்கிலீஷ் படிப்பவர்களில் உண்டான கெடுதல்கள் தொழுகை நோன்பில் சோம்பேறி

களாகவும். இதிலும் அதிகங்கெடுதிகள் (அக்கிரா) இருதய விளக்கம் நிர்ணயப்பிரமாணங்களில் மிகக் குறைவுகள் செய்கின்றவர்களாகவும் இதைக்காண பெரிய கைசேதம் இருதய விளக்கத்தில் சந்தேகத்தை வைத்து மறுதளிப்பதுடன், பெருமை காட்டல், முகப்பூச்சு, முகமயக்கம், காபிர்களைப் பின்பற்றல், இஸ்லாமியரைப் பழித்தல், தீன்தாரை கேவலமாய் பார்த்தல் முதற்போன்ற காரியங்களால் நாசம் செய்கிறதாகத் தெரிவதினால் இங்கிலீஷ் படிப்பதே கூடாது என நன்றாய் விளங்குகின்றது.

4. குர்ஆன்மஜீது ஹதீதுஷரீபில் துன்யாவை பழிக்கப்பட்டதின் சுருக்கம், தீனிபத்தான சொல் செயல்களை மதிப்புச் செய்யாமல் திரவியம், தலைமைத்தனம் இவைகளைக் கருதுவதாகவிருக்கும். எனவே இக்காலத்தில் இங்கிலீஷ்படித்தவர்களின் மூளையில் இரவுபகலாய் திரவியத்தைப்பற்றியும் தலைமைத்தனம் வகிப்பதின் பேராசையும் ஏற்பட்டு (சறகு) மார்க்க சட்டதிட்டங்களை அணுவளவேனும் கவனியாத காரணமே துன்யாவாகவிருக்கிறது. எனவே, அல்லாஹுத்தஆலாவினிடத்திலும் ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களிடத்திலும் இவைகள் (முனிவு) சாபமிட்டவைகளாகவிருக்கிறது.

5. எவ்வாறு கள்ளை ஷர்பத்தென்றும், விபசாரத்தை (நிக்காஹ்) விவாகமென்றும், சொல்வதினால் சட்ட விரோதமென்று விலக்கிவைப்பதைப்போல் இக்காலத்தில் (முனிவு) சாபம் அடையப்பட்ட துன்யாவின்பேரில் பேராசைக்காரர்கள் நற்கருத்துடையதென்றும் முன்னேற்றமென்றும் முகவுரையை மாற்றுவதால் அதன் அர்த்தங்களும் சட்டதிட்டங்களும் ஒருபோதும் மாறுபடமாட்டாது.

6. இங்கிலீஷ் படிப்பவரில் நூற்றுக்குப் பத்துப்பேர் மேற்கண்ட கெடுதிகள் அறவே இல்லாமலோ அல்லது கம்மியாகவோ இருந்தபோதிலும் அநேகம் பேர்களுக்குக் கெடுதிகள் ஏற்படுவதால் அதைக் கூடாதென்றே சொல்லப்படும்.

7. எவ்விதமாய்க் காந்தம் இரும்பை இழுப்பதை நாம் கண்ணினல் அநுபோகத்தில் பார்த்திருக்க, யாதொருவன் புத்தியின் அத்தாட்சியைக்கொண்டு இழுக்காதென வாதிப்பானேயானல் அது எப்படி ஒப்புக்கொள்ளப்படமாட்டாதோ அப்படிப்போல் இங்கிலீஷ் படிப்பதின் காரணங்கள் காபீர்களுடைய சிநேகிதத்தினலோ, அல்லது தீனியத்தான கல்வி கற்காத காரணத்தினலோ, அல்லது ஸைன்சு போன்ற கல்விகளினலோ, அல்லது நூல் ஆசிரியர்களுடைய மறைவான எண்ணங்களின் பிரதிபிம்பங்களினல் அப்புஸ்தகங்களைப் பார்ப்பவர்களின் மனதின் கெடுதிகளாலோ உண்டாகக்கூடும். எந்தசமயத்தில் கண்ணினல் திருஷ்டாந்தத்துடன் அப்படிப்பட்ட கெடுதிகளைப் பிரத்தியட்சமாய் பார்த்தபின், அப்படிப்பட்ட கெடுதியின் காரணங்களை இன்னதென்று வாதிப்பினும், நாம் கண்கூடாகத் திருஷ்டாந்தத்துடன் பார்த்திருப்பதினல் அந்த முகாந்திரங்களைப் பொய்யென்றே சொல்வதற்கு என்னதடையிருக்கிறது.

8. சாப்பிடும் சாதத்தையும் மருந்தையும் உவமானமாக வைத்துக்கொள்வோம். சாதமோ எச்சமயத்தும் பிரயோஜனத்தைத் தருமெனக் கருதப்பட்டது. மருந்தோ வியாதியின் அவசியத்தைக் கருதி ஏற்பட்டது. எனவே

சாதம் ஒருவன் வயது பூராவும் அவசியம்வேண்டும். மருந்து வியாதி தீர்ந்த சமயத்துப் போதுமென நிறுத்திவிடவேண்டும். இதுபோல் துன்யாவுடைய அகத்தியமென்பது. (சாகு) மார்க்கத்திலும் அந்தந்த அவசியத்தைப்பற்றி ஆமோதிக்கப்படும்காலத்து அப்படிப்பட்ட அகத்தியத்திற்காக இங்கிலீஷ் படிப்பது கூடுமென்றிருக்கிறது. ஆனால் (சாகு) மார்க்கத்திற்கு விரோதமான உயர்தர படிப்புகளைப் படித்து மேலான உத்தியோகத்தை அடைவது அகத்தியத்தின் வரம்பைவிட்டும் மீறினது. இவ்விதமாகவே தீனியத்தான அகத்தியத்திற்கு இங்கிலீஷ்படிப்பது ஆகும். உவமானமாக அன்னிய ஜாதியாரின் தற்க நிவாரணத்திற்காகவோ, அல்லது தீனுல் இஸ்லாத்தில் அழைப்பதற்காகவோ அகத்தியத்தின் அளவு படித்துக்கொள்வதினால் குற்றமில்லை. இதற்கு மீறி அதிகம் படிப்பது தடுக்கப்பட்டது.

9. சில உலமாக்கள் இங்கிலீஷ் படிப்பதில் அபிப்பிராயபேதம் கொள்வது அப்படிப்பினால் கெடுதியுண்டாகும் உண்டாகாது என்ற வித்தியாசத்தை அறிந்துகொள்ளாத விதத்திலிருக்குமேயல்லாது கண்ணினால் திருஷ்டாந்தமாய்க் காணக்கூடியதல்ல.

10. ஒருவன் சொந்தமான வழியில் இப்படிப்பட்ட கெடுதிகளின் குணபாடு அடைபட்டு இங்கிலீஷ் படித்துக் கொள்வதனால் உண்டாகும் தீங்குகளைவிட்டும் காக்கப்பட்டால் அவ்வேளையில் ஆகும். ஆனால், அவ்விதமாயுண்டாகிறது மிகவும் அரிதாகவிருக்கிறது.

புதிய முன்னேற்றக்காரர்களின் சந்தேகங்களின் கேள்வி.

இதுவாவது, புதியன புகுதலும் பழயன கழிதலும் வழுவனகாலம் வகையுழிபாமே என்ற புதிய முன்னேற் றத்தின் சீர்திருத்தக்காரர் (சரகு) மார்க்கத்தைப் பின் பற்றுவதிலும் (அமல்) நடபடிக்கையின் சீர்திருத்தத்தின் முயற்சிகளிலுண்டான புதிய எண்ணங்களின் கேள்விகளாக விருக்கும்.

எனது அபிப்பிராயத்தில் (சரகு) மார்க்கத்தையும் இதைப் பின்பற்றுதலையும் இந்தியாவில் தீனுடைய உலமாக் கள் எவ்வித நோக்கத்தில் வைத்திருக்கிறார்களோ அவை இஸ்லாத்திலுண்டான ஷருத்தேயல்லவெனஎண்ணுகிறேன். மேலும், காலச்சக்கரத்தின் போக்கு அல்லாஹுதஆலா வின் நாட்டத்தில் இங்கிலீஷ்காரர்களே அரசாங்கத்தை யமைத்து ஆட்சிபுரியும்படி செய்துவிட்டது. என்ன செய்ய லாம்.

எக்காலத்து நமது இஸ்லாமிய அரசர்களால் முந்தின இராஜாங்கத்தை ஆளப்பட்டதோ அக்காலத்திய சரித்தி ரங்களைப் புரட்டிப் பார்த்தால் விஷயங்கள் யாவும் நன்றாய் தெரியவரும்.

நபிகளின் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்கள் பிறப்பதற்குமுன் இஸ்லாமானவர்களின் நிலைமை எப்படியிருந்ததோ அதைக்காண மற்ற ஜாதியாரின் நிலைமை நிரம்பவும் கெட்டதாகவே இருந்தது. உவமான மாக ஐரோப்பாவில் விவகாரங்களின் பைசலில் உண்மை கண்டுபிடிப்பதற்கு பழுக்கக்காய்ந்த வெந்நீரில் குற்ற வாளியினுடைய கையை அதில் நுழையும்படி செய்வித்து

அந்தக் கைகூட்டின் வேகம் தாங்கிக் கருகாதிருக்குங் காலத்து அவனைக் குற்றவாளியல்லவென்று எண்ணினார்கள். குற்றவாளியை தண்டிப்பதற்கு பதிலாய் சுட்டுக் கரித்துவிடுவோர்களாகவுமிருந்தார்கள். எனவே ஒவ்வொரு விதத்திலும் அறபிக்கூட்டத்தாரின் காலப்போக்கை சீர்தூக்கிப்பார்க்குமிடத்து அவர்களைப்போல் பின்னடைந்த எந்த ஜாதியினரையும் அவர்களுக்குச்சமமாக இதுவரை பார்த்தறியோம். மேலும், அக்காலத்து சரியொத்த ஜாதியாரைக்காண மிகவும் கேவல ஸ்திதியிலிருந்தார்கள். பின் தீனுல் இஸ்லாமாகிறது அவர்களை சீர்திருத்தி குணங்களை சுத்திசெய்து தௌஹிதென்னும் அத்துவைதக்கொள்கையின் கல்வியை அவர்களுக்குக்கற்றுக்கொடுத்து சிறிதுகாலத்தில் ஓர் புதிய கூட்டத்தினராய் அவர்கள் வெளிக்கிளம்பி வாளைக் கையிலேந்தினவர்களாய் எத்திசை திரும்பிப்பார்த்தார்களோ அத்திசையின் தேசங்களை வென்று ஆசியா ஐரோப்பா முதல்போன்ற பெரிய பாகங்களைப் பிடித்தார்கள். இவ்வாறு வெற்றிபெற்றதை அல்லாஹுத்த ஆலா தன்னுடைய உதவியால்தான் என்று குர்ஆன் ஹதீதுகளில் எந்த ஒருவன் அல்லாஹுத்த ஆலாவுடைய கட்டளைகளைப் பின்பற்றி சீர்திருத்தம் பெறுவானோ அவன்பேரில் அல்லாஹுத்தஆலாவின் உதவியுண்டாகுமென்று கூறியதை மறுக்க எவராலும் முடியாது. எனவே இஸ்லாமானவர்கள் ஜெயக்கொடி பிடித்து பெரிய இராஜாங்கத்தை நிலைநிறுத்தியதற்குச் சமமாக வேறு சரித்திரங்களை இராதென்பது மிகையாகாது. எச்சமபத்து (குலபாயேராஷிதீன்)களான நான்கு கலீபாக்களுக்குப்பின் ஒன்றுக்கொன்று மனக்கொதிப்புகளேற்பட்டு இஸ்லாமிய

ரின் கையினால் வெட்கிக்கும்படியான கர்பலாவின் சம்பவம் நேரிட்டு கியாமநாள்வரை இஸ்லாமானவர்கள் கைசேதப் படும்படி ஏற்பட்டுவிட்டதோ அச்சமயத்து இராஜாங்கம் நீங்குவதற்கு ஆரம்பமாகிவிட்டது. ஆகிலும் மற்ற ஜாதியார் கல்வியில் தேர்ச்சிபெற்று தலை எடுக்காத நிமித்தியத்தால் இஸ்லாமியர்கள் மற்ற தேசங்களைக் கைப்பற்றுது தங்களின் தேசங்களைப் பாதுகாத்துவந்தார்கள். பின்பு இவர்களின் கேவல ஸ்திதி நாளடைவில் வெளியாகவே தேச சீர்திருத் தம் எதிரிகளைவிட்டும் காக்குந்திறமை இஸ்லாமானவர் களுக்கில்லாமல் தேசத்தில் ஒரு சிறிய ஜமீன் தங்களின் பிரஜைகளுக்கு செய்த அநீதங்கள் டில்லியின் கலகத்திற்கு முன்னும் நடந்துகொண்டிருந்தது. எனவே இன்றைக்குச் சற்றேரக்குறைய பத்தாவது நூற்றாண்டில் ஆங்கிலேயர் முன்னேற்றமடைந்து கருமருந்தின் சாமான்களைச் சேக ரித்து இஸ்லாமிய இராஜர்களுக்கு ஆபத்தை விளைவித் தார்கள் எனவே இஸ்லாத்தின் ஆரம்பத்தில் அவர் களின் நற்குணங்களும் சுத்த வீரியத்தனங்களைப்போல் இல்லாது மற்ற ஜாதியார்கள் சுகத்தைப் பாராட்டுவதி லும் அதைரியமுடையவர்களாகவுமிருந்தார்கள். இது போல் இக்காலத்திய இஸ்லாமியரோ தங்களின் இருப்பி டத்தையும்விட்டுப் பின்னடைந்தவர்களாய் மற்ற ஜாதியார் கள் முன்னேற்றமடைந்து கடைசியில் ரூமையும் சண்டை செய்து மயங்கும்படி செய்துவிட்டார்கள். தற்காலத்திய சுல்தான் அப்துல் மஜீதுகான் ஆங்கிலேயராஜாக்களின் போக்கில் நடக்காவிட்டால் ராஜாங்கம் நிலைப்பது மகா அரிதே. மேலும், சுல்தானென்றும் இந்தியாவுடைய இஸ்லா மியரைப்போலிருப்பாரேயானால் யாதொரு எதிரியும்

அவரை எதிர்பதின் அவசியமின்றியே அந்த இராஜாங்கம் தானாகவே நீங்குவதற்கு போதுமானதாகவிருக்கும். இப்படி யில்லாமல் எதை இந்தியா உலமாக்கள் ஒருபோது ஆகு மெனச் சொல்லமுடியாதவைகளைக் காலத்தின் அவசியத் திற்கேற்ற பௌஜுகளையும் சண்டைச் சாமான்களையும் தயார்செய்து தங்களின் தேசத்தைப் பாதுகாக்கிறார்கள். இப்போது அந்த சுல்தான் இந்தியாவின் உலமாக்கள் உத்திரவின்படி நடக்கிறதாய் வாக்களித்து சில உலமாக்கள் அங்குபோய் சுல்தான் ஒப்புக்கொண்டபடி மேல் நடத்தி தேச சீர்திருத்தம் செய்வார்களேயானால் அந்த ராஜாங்கம் நிலைத்துவிடுமென்றே சொல்லவும் முடியாது. அந்த ராஜாங் கம் நிலைத்திருக்கட்டும், அல்லது போகட்டும். ஷரீஅத்தைப் பின்பற்றித் தப்பாவுசெய்வது அவசியமென்று சொல்லுங் காலத்து மதிமயக்கமான இருதயத்துடன் வாழ்ந்திருப்பத னால் பிரயோஜனம் என்ன இருக்கிறது. மேலும், இஸ்லா மாகிறது, நமக்கு இராஜாங்கம் அதிகார வரம்பைக் கற்றுக்கொடுக்காமல் பிச்சையெடுப்பதையே பிரதானமாக ஏற்படுத்தினதாய் காணப்படுகிறது.

விஷயம் உண்மையில் அப்படி இல்லையென்பது தெரிந் ததுவே. மேலும், முன்காலத்திய இஸ்லாமியர்களின் போக்கு இக்காலத்தின் போக்கைப்போலில்லாததால் அதன் படி நடப்பதும் வீணாகவிருக்கிறது. இக்காலத்திய ரூம் சுல்தான் அஜரத் உபர் (ரலியல்லாஹு அன்ஹு)வைப் போன்றவர்களின் வழியைத்தெரிந்து பைதுல்மாலுடைய ஒட்டகையைத் தேடுவதற்கு தாங்களே போதுமென்ற காலத்து ஒருபோதும் இராஜாங்கம் ஆளவே முடியாது

என்று தங்களுக்கே நன்றாய்த் தெரிந்த விஷயம். அக்காலத்துடைய கலீபாவே தங்களின் ரயீயத்து விஷயங்களைத் தெரிவதற்கு இரவுபகலெல்லாம் சுற்றிக்கொண்டிருந்தார்கள். இக்காலத்தில் அப்படிச்செய்யவே முடியாது.

பதில்.

தங்களின் வாசகத்தை முற்றிலும் பலமுறை வாசித்துப்பார்த்தேன். ஆனால், தங்களின் இருதய சந்தேகங்களான நசல்களை சுயவுரிமையுடன் என்னிடம் தெரிவியுங்கள். ஏனெனில், வியாதியை வைத்தியனிடம் சொல்லுவதால் அந்த வைத்தியன் இன்னவியாதி இன்னகாரணத்தால் உண்டானதென்று தெரிந்து சிகிச்சை செய்வான். அப்படி வைத்தியனிடம் சொல்லுவதற்கு வெட்கப்பட்டால் தீங்கை விளைவிக்கும் என்பது தெரிந்த விஷயம். இதற்காக முந்தி சுருக்கமான வழியில் தங்களின் வியாதியின் காரணத்தைச் சொல்லுகிறேன். அதாவது :—தங்கள் எண்ணங்களில் சந்தேகங்களுண்டாவதற்கு காரணம் இரண்டாகவிருக்கிறது. முதன்முதல் (ஷரீஅத்) மார்க்கவிதியில் தேர்ச்சிக்குறைவாகவிருக்கிறது. இரண்டாவது அன்னிய மதஸ்தர்களுடைய பேப்பர், புத்தகங்களைப் பார்ப்பதும் கேட்பதால் உண்டாயிருக்கிறது. இதற்குச் சாதாரணமான சிகிச்சையாவது 1வது சாவகாசத்தைப் பெற்று, குறைந்தது குர்ஆன்மஜீதின் மொழிபெயர்ப்பும் மேலும் ஹதீதில் மிஷ்காத்ஷரீபில் சில அத்தியாயங்களையும் பிக்ஹு கித்தாபு பூராவையும் நன்றாய் விளங்கவைக்கும் மனிதனிடம் படித்துக்கொள்ளவேண்டும்.

இரண்டாவது புதியன புகுதல் பழயன கழிதல் என்ற புதிய சீர்திருத்தத்தின் தாவாக்காரர்களின் பிரசங்கம், பேப்பர், புஸ்தகங்கள் முதல்போன்றவைகளை அறவேபாராமலும் கேளாமலும் இருக்கவேண்டும். சொந்தமான சிகிச்சையாவது பின்னால் விபரமாய் எழுதிய ஜவாபை நீதமாய்ஆழ்ந்த சிந்தனையுடன் கவனிக்குங்காலத்து அல்லாஹுதஆலாவின் உதவியால் சகலவிதமான சந்தேகங்களும் நீங்கித் தற்சமயம் (அக்கீதா) இருதயவிளக்கம் நிர்ணயப்பிரமாணத்தைச் சீர்திருத்தமாக்கி அமலுடைய சீர்திருத்தம் சிறுகச் சிறுக உண்டாகிவிடும். விபரமான ஜவாபாகிறது. உங்களுடைய தாவாவாகிறது, இந்தியாவுடைய தீனின் உலமாக்கள் ஷரீஅத்தையும் ஷரீஅத்தைப் பின்பற்றுவதையும் அவசியமென்பதை இஸ்லாத்தின் ஷரத்துகளல்லவென்றும் இதற்குச் சரித்திரத்தின் முகாந்திரங்களால் கௌமுகள் மாறுதல் அடைந்ததைக்கொண்டு மறுப்புச் செய்தீர்கள். நீதத்தின் பார்வையால் பார்க்கவேண்டியது தீனுடைய உலமாக்கள் தங்களின் வயது பூராவும் இல்மைச் சம்பாதித்து முன்னேற்ற மடைந்தவர்களின் கவனிப்பு நம்பிக்கையேயற்றதாகவும் ஒரு சரித்திரக்காரனுடைய ஷரீஅத்தின் சட்டங்களின் கவனிப்பு எந்தவிதமாய் நம்புவதற்கு லாயக்காகும்.

மேலும், தீனுடைய ஆலிமாகிறவர் தன்னுடைய ஒவ்வொரு தாவாவை புரூபு செய்வதற்காக அல்லா ரசூலுடைய திரு வசனங்களாகிய குர்ஆன்ஷரீபு ஹதீது ஷரீபுகளாயிருப்பதால் சரித்திரக்காரன் தனது அபிப்பிராயத்தைக்கொண்டு மாத்திரம் அத்தாட்சி காட்டுவது ஆலி

மூடைய சொல்லைக்காண எப்படி மேலாகும். இதன் காரணம் அபிப்பிராயக்காரனுடைய பார்வையில் ஷரீஅத்து மறைவுபட்டு நகத்தளவுமாத்திரம் தெரிகிறது. எனது சுருக்கமான நியாயத்திற்குப் பட்டமட்டும் சுருக்கஞ் செய்யாமல் அப்படிப்பட்ட சரித்திரத்து அத்தாட்சியின் நிலைமையை எடுத்துக் காட்டுகிறேன். இஸ்லாமியர் மேலும் மற்ற சாதியார் இவர்களின் நிலைமையைச் சற்று சீர்தூக்கிப் பார்க்குமிடத்து நவீன நாகரீகத்தைக் கைப்பற்றி நடப்பதன்றி இஸ்லாமிய இராஜாங்கம் நிலைத்திருக்க முடியாது என்பது உங்களின் கருத்தாயிருக்கிறது. இதற்கு விடையாவது. இந்திய உலமாக்கள் எந்த நவீன நாகரீகபோக்கில் ராஜாங்கம் நிலைத்திருப்பதை மார்க்கத்திற்கு விரோதமெனக் கருதுகின்றனர் என்று இதுவரை எனக்கு ஒன்றுமே தெரியவில்லை இதைக்கொண்டு கருத்து, சண்டைக்காக புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட சாமான்கள் பாதுகாப்பென்றாலோ இதை இந்திய உலமாக்கள் யார் ஷரீஅத்துக்கு மாற்றம் என்று சொல்லுகின்றார்கள். காபிர்களுடைய பழக்க வழக்கங்களுக்கு ஒத்து நடப்பதைபற்றியுள்ள மசலாக்களால் சந்தேகங்கள் ஏற்படுங்காலத்து இந்த மசலாவை இந்திய உலமாக்களால் கற்பித்துரைப்பதுவேயல்லாமல் குர்ஆன் ஹதீது உலகமெங்குமுள்ள உலமாக்கள் இதில் ஒற்றுமையாகவிருக்கின்றார்கள். மேலும் யாதொருவரும் தேசத்திய ஆலீம் இதற்கு மாற்றம் செய்வாரேயானால் குர்ஆன் ஹதீதுக்கு மாற்றம் செய்தவரென்று அவரின் சொல்லை அங்கீகாரம் பண்ணமுடியாது என்று ஏற்படும். எனவே, இராஜாங்கம் நிலைத்திருக்கிற தளவாடங்களுக்கும் காபிர்களுடைய பழக்கவழக்கங்களுக்கும்

ஒப்பாயிருப்பதற்கு இவையிரண்டுக்கும் யாதொரு சம்பந்தமே கிடையாது. ஆனால், மேஜை குர்சியில் சாப்பிடுதல், வீடுகளில் படங்கள் முதல்போன்றவைகளைத் தொங்கவிடுதல், என்று சொல்லுமிடத்து இதற்கும் இராஜாங்கம் நிலைத்திருப்பதற்கும் யாதொரு ஒப்பும் உவமானமும் இடையவே கிடையாது. எனவே, (சரகு) மார்க்கபத்வாக்காரர்கள் எதை ஹராமென்று சொல்லும் நவீனப்போக்கு இன்னதென்று புலப்படவேயில்லை. அப்படிப்பட்ட மார்க்கத்திற்கு விரோதமான நவீன நாகரீகப் போக்கில் அரசாங்கம் நிலைத்து மதிமயக்கமாகிய இருதயத்துடன் ஜீவிப்பதைவிட்டும் தப்பித்துக்கொள்ளும் வழியைத் தெரிந்து கொள்ளுமிடத்து அதைத் தாங்களே சற்று சிந்தனை செய்து ஆலோசித்துப்பாருங்கள்.

அதாவது அல்லாஹுத்தஆலாவின் கட்டளைக்குப் படிந்து நடப்பதையும் சொற்பகாலத்தில் அழிந்துபோகும் படியான அரசாங்கத்துச் செல்வத்தின் பிரயோஜனத்தையும் புத்தியின் நிதானத் தராசில் நிறுத்து எந்தத் தட்டுக் கனத்திருக்குமென்று கவனித்துப்பாருங்கள்.

நான் தங்களைக் கேட்கிறேன், கொள்ளையடிப்பது சட்டத்திற்கு விரோதமாகவிருப்பதால் இந்தச் சட்டப்படி நடப்பதில் மதிமயக்கமாக ஜீவித்துத் திரவிய நஷ்டத்திற்காகாமல் கவர்மெண்டின் சட்டத்தை எதிர்பாராமல் கொள்ளையடிப்பதை ஒருவன் பாஸ் பண்ணுமிடத்து தங்களின் புத்தி என்ன உத்திரவளிக்கும். ஆகுமென்று சொல்லுமா அல்லது ராஜகட்டளைக்கு கட்டுப்பட்டிருப்பதுடன் ஏழையாயிருப்பது இப்படிப்பட்ட குற்றத்துச் செல்வமாயிருப்

பதைக்காண லட்சமடங்கு மேலென்று சொல்லுமாவென் பதை கவனித்துப்பாருங்கள்.

எனவே, அல்லஹூத்தஆலா உடைய மதிப்பு கவர் மெண்டுக்குச் சமமாக இராதது என்ன புதுமையாகவிருக் கிறது. மேலும், நான் தங்களைக் கேட்கிறேன். குபிரைத் தெரிந்துகொள்ளாதவரை அரசாங்கம் நிலைத்திருக்க முடி யாதென்றிருக்குமாகில் அக்காலத்தில் இஸ்லாமாகவிருந்து மவுத்தாவது மேலா அல்லது காபிராகவிருந்து வாழ்வது மேலா? அப்படியிருக்குமானல் முடிவாக எல்லாக் கவுமு களும் குபிரியத்தின் பாவத்தின்பேரில் ஒத்துக்கொண்டு ஒரு சொந்தமான அரசாங்கத்தை கைப்பற்றுமிடத்து நாம் ஈமான் இஸ்லாத்தில் நிலைத்து மதிமயக்கமான இருதயத்து டன் ஜீவிப்பதற்கு என்ன சிகிச்சைசெய்கிறது எமது ஆப்த நண்பரே. முதலும் தலைமைத்தனமும் ஆதேயப்பொருள் அதாவது தீனைக் காப்பாற்றுவதற்காகச் சேகரிக்கப்படும் பொருளையாம். ஆதாரப்பொருளின் கருத்தாவது அல் லாஹ்வின் திருவுள்ளம் பொருத்தத்தின்மீது திரவியத் தையும் தலைமைத்தனத்தையும் அடையுங்காலத்து அதனல் குற்றமேஇல்லை. அவ்வாறில்லையேல் இவ்விரண்டும் எப்படிப் பட்ட அவசியமாக விருப்பினும் எவ்வாறு முடியுமென்று கவனியுங்கள். வியாதியஸ்தனுக்குப் பத்தியக்குறைவான வஸ்துக்களை விலக்குவதனல் பொறுப்பற்று மதிமயக்கம் சம்பவிக்கும் காலத்து அப்படிப்பட்ட பத்தியத்தின் முடிவில் சுவாத்தியம் பெற்றுக்கொள்வதின் காரணத்தை முன்னிட்டு இடையில் ஏற்பட்ட பத்தியத்திற்காக இன்பங் களை நீக்கிப் பத்தியத்தை ஏற்றுக்கொள்கிருன். மேலும் கிருபையாளனை வைத்தியன் அப்படிப்பட்ட வியாதி

யஸ்தனின் பொறுப்பற்ற மதிமயக்கத்தை ஒருசிறிதும் பாராட்டாமலிருப்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள். மேலும் மற்றொரு கேள்வியில் நமக்கு இஸ்லாமாகிறது அரசாங்கத்தைக் கற்றுக்கொடுக்காமல் பிச்சை பெடுப்பதை கற்றுக்கொடுக்கிறதென்று சொன்னீர்கள். அதற்கு விடை யானது இப்படிப்பட்ட அரசாங்கத்தைக் கற்றுக்கொடுத்து முடிவில் நரகத்திற்குப் போகும்படியாய்க் கற்றுக்கொடுக்கவேயில்லை. ஆனால் இப்படிப்பட்ட அரசாங்கத்தை ஆகுமென்று கூறுமிடத்து கிபாமநாளில் பிர்ஔனும் அல்லாஹ் விடத்து விண்ணப்பம் செய்வான். எனது அநுபோகத்தில் தெரியவந்தது, நான் ஆண்டவனென்று சொல்லாத காலத்து என்னுடைய அரசாங்கம்போய் மனிதவர்க்கத்தினரிடத்து மிகுந்த கேவலமடைந்திருப்பேன். அவ்வாறில்லாது அரசாங்கத்தை நிலைப்படுத்துவதற்காக வயது பூராவும் நான் ஆண்டவனென்று சொன்னேன் என்றால் இப்படிப்பட்ட புகலை ஏற்றுக்கொள்ளப்படுமா? மேலும் தங்களின் சொற்படியே இணங்கிப்பேசுகின்றேன். ஒரு மனிதன் நிரம்பப் பிரயாசை எடுத்து அரசாங்கம் நிலைத்திருப்பது அவசியமாயும், அப்படிப்பட்ட அரசாங்கம் நிலைக்கவேண்டுமானால் பாவம் செய்யாமல் முடியாதென நிரூபணமாக்கி அப்படிப்பட்ட அரசாங்கம் நிலைத்திருக்கவேண்டுமென்பதை நாம் ஒப்புக்கொண்டோமென வைத்துக்கொள்வோம். ஆனால் இது (இக்ருஹ்) வலுவந்தத்து மஸலாவைச்சேர்ந்தவை.

எனவே (ஷரீஅத்து) மார்க்கத்தில் இதற்காகவே சட்ட திட்டங்கள் ஏற்பட்டிருக்கிறது. அதன் சுருக்கமாவது வல்வந்தத்தால் கட்டுண்டவன் வெளியில் பாவத்தைச்செய்த

போதிலும் அப்படிப்பட்ட பாவங்களை ஒப்பாது மனதில் எந்த சமயத்தும் கடின வெறுப்புக்காட்டியவனாகவே இருத்தல்வேண்டும். ஏனெனில் அப்படிப்பட்ட மனிதனின் மனவெறுப்பை எவரும் தெரிந்துகொள்ளமுடியாததால் அப்படிப்பட்ட பாவத்தை மன சந்தோஷத்துடன் செய்ய அவசியமேயில்லை. ஆனால் வலுவந்தத்தில் அகப்பட்டவன் வெளியில் பாவம் செய்தவனைத்தெரிந்தாலும் அவன் (ஷரீஅத்) மார்க்க சட்டதிட்டத்தைப் பின்பற்றியிருப்பதனால் விரோதம் செய்தானென எண்ணுவதற்கிடமில்லை. எனவே நான் கேட்கிறேன். இபபடிப்பட்ட கட்டாயங்கள் ஏற்படுவதாயிருந்தால் இராஜாக்களுக்கு ஏற்படும். மற்றபடி நம்மைப்போன்றவர்களுக்கு எந்த அரசாங்கம் கைவிட்டுப்போகிறதென இப்படிப்பட்ட பாவங்கள் செய்யவேண்டுமென்ற அவசியம் ஏற்படப்போகிறது. இதன் முடிவானது இராஜாக்களுக்கே இப்படிப்பட்ட மஸலாப்பொருந்துமேயல்லாது நமக்கு இது பிறயோஜனப்படாது. மேலும், தங்களின் மூன்றாவது கேள்வியில் சுல்தானும் ஹஸரத்து உமர் (ரலியல்லாஹு அன்ஹு)வுடைய வழியில் நடக்குமிடத்து அரசாங்கம் புரியமுடியாதென எழுதினீர்கள். அதற்கு விடையானது, அரசாங்கம் செய்யமுடியாதென்று சொன்ன வார்த்தையானது காணாத ஒரு வஸ்துவின்பேரில் கல்லெறிந்த பாவனைபோலாகவிருப்பதனால் இதை ஒப்புக்கொள்ளவேமுடியாது. ஏனெனில் ஒரு மனிதன் இதற்கு மாற்றமாய் நிரம்பவும் நல்லவிதத்துடன் அரசாங்கஞ்செய்ய முடியுமென வாதம் புரியுமிடத்து அதைப் பொய்யென நிரூபணம் செய்ய என்ன முகாந்தரமிருக்கிறது. தங்களின் சொற்படியே பார்ப்பினும் அதன் ஜவாபு ஹஜரத் உமர்

(ரலியல்லாஹு அன்ஹு)வுடைய வழியில் இரண்டுவிதமிருக்கிறது. (1) பரலு வாஜிபு என்ற மார்க்க அத்தியாவசியத்திற்குக் கட்டுப்படுவதால் அரசாங்கத்திற்கு எந்த நிலைமையிலும் அதற்கு ஒருபோதும் கெடுதியென்பது இல்லை (2) சரகு மார்க்கத்தில் அவசியமில்லாதவை உதாரணமாக இராஜாங்கள் தனிப்பட ஊர்ப்பிரவேசம் செய்தல்போன்றவை எனவே ஷரீஅத்தில் இது கடமையென ஏற்படவில்லை. இதனால் தெரிவது என்னை. எவை சரகு மார்க்கத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றதோ அது அரசாங்கத்திற்கு ஒரு கெடுதலுமில்லை. எது அரசாங்கத்திற்கு கெடுதியாகவிருக்கின்றதோ அது சரகு மார்க்கத்திற்கு அவசியமுமில்லையென விளங்கியும் ஷரீஅத்தின் (பத்வா) மார்க்கத்திற்பின்பேரில் அமல் செய்யமுடியாதென்ற வாதம் எப்படி நிரூபணமாகும்.

## மற்றொரு கேள்வி.

நம் உலமாக்கள் காலத்தின் பிற்போக்கின் சம்பவங்களை அடிக்கடி தெரிந்துகொண்டும், காலத்தின் போக்கை யறிந்து சீர்திருத்தம்செய்யாமல் பள்ளிவீடுகளில் மூலையைத் தெரிந்து உட்கார்ந்துகொண்டார்கள். இந்தமட்டில் உலமாக்கள் வெளிக்கிளம்பி இஸ்லாமிய சிறுவர் சிறுமிகளின் நிலைமை எவ்வாறிருப்பதென கவனிக்கும் சமயத்து அவர்களை சீர்திருத்தம் செய்வதற்கு ஏதேனும் ஒரு வழியைக் கண்டுபிடிக்கலாம். அவ்வாறில்லையேல் கொஞ்சகாலத்திற்குள் சீர்திருத்தத்தின் சிகிச்சையின் நம்பிக்கை ஆதரவற்றதாய் முடியுமென்பதாம்.

பதில்.

எமதருமை நேசரே, தங்களுக்கு காலத்தின் நிலைமை இன்னதென்று விளங்கவில்லைபோலும். எந்த நபிகளின் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் எனது ஆத்மா அவருக்காகத் தத்தம் பண்ணக்கடவது) மீது கலிமாவைச் சொல்லி உண்மைகொண்டு உவப்பு வைப்பதை ஈமானில் ஒருபாகமென்று நாம் உறுதிகொண்டிருக்கிறோமோ அந்த நாயகம் கியாமத்தின் இக்காலத்துடைய அடையாளங் களில் சிலவற்றை நிறம்பவும் தாக்கிதாய் பலவந்தமான ஆலோசனைசெய்து திருவுளம்பற்றிப்போயினர். அதின் சாரம் என்னே? கியாமத்துடைய அடையாளங்கள் வெளி யான கடைசி காலத்தில் மூலைகளைப்பற்றிப் பிடியுங்கள். மேலும் காடுகளிலுள்ள மரத்தின் வேரைப் பல்லினாற் பிடித்துக்கடித்து உங்கள் உயிரைவிடுவது அதைக்காண மிகவும் மேலானதென்றும் மேலும் ஒருகாலம் தோன்றும் அக்காலத்திலே காலையில் இஸ்லாமியராகவும் மாலையில் காபிரீன்களாகவும், மாலையில் காபிரீன்களாகவும் காலையில் இஸ்லாமியராகவும் வித்தியாசங்களுண்டாகும். மேலும் ஒவ்வொருவரும் தன் பேராசைக்கு வழிப்பட்டு தனது நபு சானியத்தான ஆசாபாசங்களை பின்பற்றி, ஆகிரத்தைக்காண துன்யாவை மேலாகக் கருதி, தன் தன் யோசனைகளை மிகப் பெரிதாக மதித்திருப்பதைக் காண்பீர்களோ அதுகாலத்து உங்கள் தீனை ஸ்திரப்படுத்திக்கொள்ளுங்கள். அவாமென்ற பாமரர்களுக்குமுன் போகாதீர்கள் என்பதாம். எனவே, எமதாருயிரருமை ஸ்நேகரே, இப்படிப்பட்ட அடையாளங் களாகிறது, இதே காலம்தான் என்று ஒவ்வொருவருக்கும்

நன்றாய் தெரிந்திருக்க உலமாக்கள் மூலையைப்பற்றிப் பிடிப்பதனால் என்ன குற்றம் ஏற்பட்டுவிட்டது. மேலும், எந்த மனிதர்கள் மூலையைவிட்டு வெளிக்கிளம்பி இப்படிப்பட்ட (பித்னா) மோசத்தில் நுழைவார்களோ அவர்களுக்கு அல்லாஹுத்தஆலாவின் (விலாயத்) அருளின் தத்துவத்தைக் கொடுத்திருக்குமிடத்து மீட்சி பெறுவார்கள். அவ்வாறில்லையேல் அநேகம்பேர் மற்றவர்களைச் சீர்திருத்தம் செய்வதற்குத் தலையிட்டுத் தங்களைத்தானே கெடுத்துக்கொள்வார்கள். தளிர்விட்டெரியும் நெருப்பிலகப்பட்ட ஒருவனைக் காப்பாற்றுவதற்காக மற்றொருவன் குதித்தால் கரிந்துபோவான் என்றெண்ணுவது ஓர் ஆச்சரியமல்ல. இதன் பெரிய காரணமாவது. மற்றவனைச் சீர்திருத்தம் செய்யத் தலையிடுமுன் தன்னைத்தானே சீர்திருத்துவதற்கு முயற்சிக்காததால் மற்றவர்களுக்குக் குணத்தின் பாகுபாடமையப் போவதில்லை. மேலும், இப்படிப்பட்ட மனிதன் மற்றவனைச் சீர்திருத்தம் செய்வதின் நம்பிக்கை பூண்டவனாய் முகப்பூச்சு நளினத்தைக்கொண்டு முன்னிட்டு அவர்களுடைய சொல் செயல்களின்பேரில் கண்ணை மூடுவதால் மெள்ள மெள்ள இவனுடைய கல்பும் இருளடைந்து போகிறதை பலமுறையும் கண்காட்சியாய் பார்க்கப்படுகிறது. எனவே, இக்காலத்திய துன்யாதாரின் வழமையாகிறது. உலமாக்களை தங்களின் போக்கில் சேர்ப்பதற்கான முயற்சி யெடுப்பதைத்தவிர தாங்கள் அவர்களின் போக்கில் நடப்பதற்குப் பிரியமில்லாதவர்களாகவே யிருக்கின்றார்கள்.

இனிக் கவனிக்கவேண்டியது துன்யாதாரர்களை உலமாக்கள் அடுத்து வீணாய் நேரங்களைப் பழுதுபண்ணுவதி

ணல் என்ன பிரயோஜனமிருக்கிறது. ஆகையால் தங்களின் தீனைத் தாங்களே காப்பாற்றிக்கொள்வது பெரிய செல்வமா யிருக்கிறது.

கவனிப்பு.

எந்த மனிதன் தான் சீர்திருத்தமடையவேண்டுமென்று நற்கருத்து வைப்பானகில் அவன் சீர்திருத்தம் பெற எந்த மட்டிலும் நம்பிக்கையிருக்குமோ அந்த மட்டுக்கும் எல்லா உலமாக்களும் தயாராகவிருக்கிறார்கள். எந்த மட்டுக்கும் நம்பிக்கையற்றுவிடுமோ அக்காலத்து (வாலு) உபன்யாசத்திற்குப்பதிலாக அல்லாஹுத்தஆலாவிடாத்தில் நேர்வழி பெறுவதற்கான (துஆ) பிரார்த்தனை செய்யவேண்டும். தற்கால நிலைமைகளைப்பற்றிய அநேகக் கேள்விகளும் அதற்குரிய தற்கபதில்களுமிருப்பதால் விருப்பமுள்ளவர்கள் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

பேப்பர்கள் பார்ப்பதின் சட்டதிட்டங்கள்.

கிழே குறிப்பிட்ட ஷருத்தின்படி பேப்பர்களில்லாம லிருக்குமானல் அதைவாங்கிவாசிக்கலாம். அவைகளாவன:-

(1) திட்டமில்லாத (வதந்தியான) காரியங்களை பிரசுரித்து விடுப்பது.

(2) ஒருவரின் ஐபு (புறம்படுதூர்) இவைகளைப் பிரசுரித்து விடுப்பது.

(3) சாமர்த்தியத்தால் மற்றவர்கள்மீது வீண் அபிப்பிராயபேதங்களையும் மறுப்புகளையும் பிரசுரித்து விடுப்பது.

(4) தர்க்கத்தில் வீணான பரிகாசச் சொற்களை வரைந்து விடுப்பது.

(5) எதிரியை அவமானப்படுத்தி அன்னவன் பின் நடபடிக்கைகளை வரைந்து விடுப்பது.

(6) ஒருவரின் சிட்சை, சரீர நஷ்டம், பொருள் நஷ்டம், இவைகளைப்பற்றி நிறம்பவும் சந்தோஷித்துப் பேப்பரில் பிரசுரித்து விடுப்பது.

(7) மெய் பொய் என்பதைக் கவனியாது ஒருவரைப் புகழ்ந்து முகப்பூச்சுகள் செய்து பிரசுரித்துவிடுப்பதி.

(8) காபிர், பாசிக்கு, இவர்களின் புகழை (செய்யுள்) பாடல் வியாசத்தால் பிரசுரித்துவிடுப்பது

(9) மார்க்கத்தின் வரம்பைக் கவனியாது பார்ப்போர் சந்தோஷிக்குமாறு வியாசங்களை பிரசுரித்து விடுப்பது.

(10) தீனியத்தான (அக்கீதா) இருதயவிளக்கம் மஸாயில்களை தலீலன்றி அபிப்பிராயத்தை வெளியாக்கியும் சரகை மாற்றிப் பொய்யாக எழுதியும் தாடி வட்டி முதல் போன்றவைகளைப்பற்றி இழிவு செய்த பாவனையைப்போல் பிரசுரித்து விடுப்பது.

(11) மனிதர்களின் ஐக்கியங்களையுணர்ந்து அந்நிலைமை யாளர் மறைத்துவைப்பதை பிரசுரித்துவிடுப்பது.

(12) சந்தேகமான அடையாளங்களை உறுதிசெய்து பிரசுரித்து விடுப்பது.

(13) ஆசிரியரையும் பேப்பரையும ஆசிரியருக்குச் சம்பந்தப்பட்டவர்களையும் சில சமயத்து அன்னவரின் திறமையின்மீது பெருமை பாராட்டிப் பிரசுரித்துவிடுப்பது.

(14) பேப்பரின் வாசகர்கள் மனம் சந்தோஷிக்கும் பொருட்டு சில சந்தர்ப்பங்களில் ஒருவருக்கு அவலட்சணத்தின் பட்டங்கொடுத்துப் பிரசுரித்து விடுப்பது.

(15) உண்மையான கருத்து இல்லாமல் பிரயோஜனமற்ற கதையை பேப்பரில் அலங்கரித்தும், சிலரின் லேவாதேவியில் அன்னோரைக் கேளாமல் ஆலோசனை கொடுத்தும், அரசாங்கத்தின் லேவாதேவியில் தங்களின் ஆலோசனையைச் செலுத்தியும் அதிலே சிந்தனையை வைத்து வீணுய்க் காகிதங்களைக் கருப்பாக்குவதைத் தவிர மேல் கண்ட ஷருத்தின்படியுள்ள பேப்பர்கள் மிகக் குறைவாகவே யிருக்கிறது.

(16) சீமான்களைக்கேளாமல் பேப்பரனுப்பிச் சம்பளம் பெறுகிறது. (காரணம் அன்னோர் பேப்பர்களில் தங்களின் கெடுதிகளைப் பிரசுரித்துவிடுவார்கள் என்று அஞ்சிச் சம்பளம் கொடுக்கின்றனர்)

(17) மார்க்க விரோதமான ரிஸாலா கித்தாபு பிரசங்கம் இவைகளை மறுப்பின்றி அவ்வாசகங்களை நகல் செய்தும் காபிர்களின் ஜோதிடங்களுள்பட பிரசுரித்தும், நம்பிக்கை கெட்டவர்களுடைய இஷ்திஹார்களை பதிவுசெய்து கல்குகளை ஏமாற்றம் செய்தும், குணங்களையும் எண்ணங்களையும் கெடுக்கும்படியான நாவல்களையும் பிரசுரித்து விடுப்பது.

(18) மேற்கண்ட கெடுதியின் பயத்தை விடுத்துக் காக்கப்படுதல் உறுதியாகவிருப்பினும் தீனியத்தான அகத்தியங்களின் மறதியாளராகி அவ்வகை இல்முகளைப் புறக்

கணித்துப் பேப்பர் பார்ப்பதுவே கண்ணுங் கருத்தாக விருப்பது.

## எச்சரிக்கை.

பேப்பர் விற்போர் வாங்குவோர்களுக்கு இப்படிப்பட்ட கெடுதிகள் இல்லாதிருக்கும் காலத்து நான் ஹலாலே ஹரா மென்று சொல்லமுற்படேன். ஆயினும் இவ்வாறேற்படுதல் மிகக் குறைவாகவே இருக்கின்றது. மனிதன் துன்யாவில் ஆகிரத்தின் பொக்கிஷத்தைச் சேகரம் செய்ய வந்திருப்பதால் அசல் வேலை தீனியத்தான பராக்கில் இருத்தல்வேண்டும். அவசியத்தின் அளவில் தீனியத்தான காரியத்தில் உதவிக்காகத் துன்யவியத்தான காரியம் வேண்டுமளவு நடுநிலைமையான ஷருத்தை உபயோகிக்கும்படி உத்திரவிருப்பதால் இதே ஷருத்தை முன்னிலையில் வைத்து, எது லரம்பைக் கடக்கின்றதோ அதைவிட்டுத் தப்பித்துக்கொள்ளல்வேண்டும். இச்சட்டத்தை அறிவதற்கு தீனியத்தான சிறிய பெரிய கித்தாபுகளை ஓதியும் கேட்டும் உலமாக்களுடைய சகவாசத்திலிருந்தும் தெரிந்துகொள்வது அவசியம்.

ஆயத்து:— நம்மீது எத்திவைப்பது கடமையைத்தவிர வேறொன்றுமில்லை. ரிசாலா அஃப்பார்பீனி.

அஷரபலி மௌலானா,
தாணுபோன்.

1911-வருஷம் ஸ்தாபிக்கப்பெற்றது.

தந்தி விலாசம்:—"நடேசம்" திருச்சி.

یس-ٹی-نٹیسم پلّے تاجر پارچہ زرین ریشمی مسلم-بڑا بازار ٹرچناپلی-

# எஸ். டி. நடேசம் பிள்ளை,

முஸ்லிம் நிக்காஹ் என்ற கல்யாண ஜவுளிகளாகிய
பட்டு ஜரிகை குல்பதன் தோவந்து தாவணி
பனாரஸ் ஜரிகை ஜவுளி வியாபாரம்,

**பெரிய பஜார், திருச்சினாப்பள்ளி.**

உயர்ந்த ஜவுளி! குறைந்த விலை!! சொற்ப லாபம்!!! அதிக வியாபாரம்!!!!

அடிக்கடி புது சரக்குகள்! நம்பிக்கையான ஒரே விலை!!

வேண்டியவர்கள் வி. பி. யில் ஆர்டர் செய்யவும். ஷை ஆர்டர்களுக்கு ரூ. 100-க்கு 10 வீதம் அட்வான்ஸ் அனுப்பவேண்டும்.

Established **1911.** Tel. Address: "**Natesam**" Trichy.

یس۔ ٹی۔ نٹیسم پلے تاجر پارچہ زرین و ریشمی مسلم بڑا بازار ترچناپلی

**Fine Clothing! Cheap Price!! Small Profits!!! Wide Sale!!!!**

**Frequent New Supplies! One Reliable Fixed Rate!!**




# S. T. Natesam Pillai,

Muslim Silk Cloth Merchant,

**Big Bazaar, TRICHINOPOLY.**




**Intending Purchasers could order by V. P. P. with 10 per cent advance only.**

இய்யாக நஸ்தயீன்.

# தர்ஜுமதுல் குர்ஆன்
# பி
# அல்தபில் பயான்
என்னும்
# தமிழ் மொழிபெயர்ப்பு
# குர்ஆன்.

முதல் வெளியீடு வெளிவந்துவிட்டது. தெளிவான விரிவுரையும் சேர்க்கப்பெற்றுள்ளது.

தென் இந்திய உலமாக்களால் அங்கீகரிக்கப்பெற்ற தமிழ் மொழிபெயர்ப்பு இஃதொன்றே.

இஃது வெளிவருவதற்கு முன்னதாகவே ஒரு நூற்றுக்குமேற்பட்ட உலமாக்களின் பார்வையிற்சென்று திருத்தி அமைக்கப்பெற்றுள்ளது.

இவ்வளவு பிரயாசையுடனும், இவ்வளவு பொருள் செலவுடனும், இத்தனை உலமாக்களின் ஆதரவைப் பெற்று வெளிவந்த நூல் நம்தேசத்தில் இதனைத்தவிர வேறொன்றுமில்லை. மிக்க அழகான அறபி எழுத்துக்களில் திருகுர்ஆனின் ஆயத்துகளும் ஆங்காங்கு சேர்க்கப்பெற்றுள்ளன. அலிப்-லாம்-மீம்-ஜுஸுஉ என்னும் திருகுர்ஆனின் முதற்பாகம் பூராவும் உள்ளது. 50(lbs) பவுன் (Double Royal) டபுல்ராயல் உயர்ந்த கிளேஸ் (Glaze) கடிதத்தில் ராயல் (Royal) 1/8 சைஸில் அச்சிடப்பெற்றுள்ளது. பதிப்புரை, மதிப்புரை, முன்னுரை இவைகளுடன் 232 பக்கங்களுள்ளது. இஃது வெளிவந்து வெகு சொற்ப காலத்தில் ஆயிரக்கணக்கான பிரதிகள் செலவாகிவிட்டன.

கிடைக்குமிடம் :— கிரயம் ரூ. **2—0—0** தான்.

**இஸ்லாமிய நூற்பிரசுரச்சங்கம்,**

பாலக்கரை, திருச்சி.